இதழ் 329
08 மார்ச் 2025
20 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1






## 2025ம் ஆண்டு அனைத்துலகப் பெண்கள் நாளுக்குரிய மையப்பொருளை

# ஈழத்துப் பெண்கள் எவ்வாறு முன்னெடுப்பது

முனைவர் **நீற்றா பற்றிமாகரன்**

# மத்திய கிழக்கு நாடுகளில்

## அதிக கவனம் செலுத்தும்

# ரஷ்யா

## ரஷ்ய ஊடகவியலாளருடனான செவ்வி

தமிழில்: **ஜெயந்திரன்**



# நேட்டோவின் நாட்கள் எண்ணப்படுகின்றனவா?

வேல்ஸில் இருந்து **அருஸ்**



© 2025 இலக்கு இணையம்

# வடக்கு கிழக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

## ரவிகரன் எம்.பி கோரிக்கை



மாவீரர்களுடைய உறவுகளும், தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவு கூருவதற்காக, வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அமைச்சரும், பாராளுமன்ற சபை முதல்வருமான விமல் ரத்நாயக்க அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் 07.03.2025. நேற்று இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் இக்கோரிக்கையை விசேடமாக முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இறந்தவர்களை நினைவு கூறுதல் என்பது அந்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும்.

எங்களுடைய மக்கள் வடக்கு, கிழக்கில் நினைவு நாளாக நவம்பர்-27 அன்று துயிலுமில்லங்களிலும், மே-18அன்று முள்ளிவாய்க்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# சர்வதேச விசாரணை: ரணிலிடம் கேள்வி எழுப்பிய கலும்மக்ரே!



சர்வதேசவிசாரணைபொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள்தவறியதால் இன்று சர்வதேச சட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது என கருதுகின்றீர்களா என இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் நிகழ்ந்த பாரிய மனித உரிமைமீறல்களை வெளிக்கொணர்ந்த கலும் மக்ரே (Callum Macrae) முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அல்ஜசீரா பேட்டியின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

காசாவில் யுத்தம் ஆரம்பித்து ஒரு மாதத்தின் பின்னர் அமெரிக்காவின் புத்திஜீவிகள் அமைப்பொன்று ஹமாசினை முற்றாக அழிப்பதற்கான ராஜபக்ச திட்டம் என கட்டுரையொன்றை வெளியிட்டது.

இஸ்ரேல், ராஜபக்சாக்கள் பயன்படுத்திய தந்திரோபாயத்தை பயன்படுத்தவேண்டும் என அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர்கள்குறிப்பிட்ட மூலோபாயம் என்பது பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை, யுத்தசூன்ய வலயம் என அழைக்கப்படும் பகுதியை நோக்கி செல்ல வைத்து அதன் பின்னர் அவர்கள்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இலங்கை – ஜப்பானுக்கு இடையில் ஒப்பந்தம்

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாடு குறித்த இருதரப்பு ஒப்பந்தத்தில் வெள்ளிக்கிழமை (07) கையெழுத்தாகியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள நிதியமைச்சில் இன்றையதினம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஜப்பான் அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்கான அந்நாட்டு தூதுவர் அகியோ இஸோமாட்டா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டிருக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு, இருதரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் ஊடாக ஜப்பானுடனான கடன்மறுசீரமைப்புசெயன்முறையைஇலங்கை உத்தியோகபூர்வமாகப் பூர்த்தி செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும் எனத் தெரிவித்துள்ளது.

'கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக கடந்த 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கைக்கும், உத்தியோகபூர்வ கடன்வழங்குனர்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சீனாவுடன் போருக்கு தயார்

## அமெரிக்கா அறிவிப்பு



சீனாவுடன் முழு அளவிலான போருக்கு தாம் தயாராக இருப்பதாக அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் பீற் ஹெகசத் கடந்த புதன்கிழமை(5) தெரிவித்துள்ளார். அமெரிக்காவுடன் எந்த வகையான போரையும் எதிர்கொள்ளத் தயார் என சீனா அறிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.


சீனாவின் பொருட்களுக்கு அமெரிக்கா 20 விகித வரியை விதித்ததற்கு பதிலடியாக அமெரிக்காவின் பல பொருட்களுக்கு சீனாவும் 15 விகித வரியை உயர்த்தியதுடன், பலபொருட்களின் இறக்குமதிக்கும் தடைவித்துள்ளது. இது உலகின் மிகப்பெரும் பொருளாதார வல்லரசு நாடுகளான இரு நாடுகளுக்கும் இடையில் மோதல்களை அதிகரித்துள்ளது.

நாம் மிகவும் ஆபத்தான உலக ஒழுங்கில் வாழ்கின்றோம். உலகில் பல நாடுகள் மிகவும் பலம் வாய்ந்ததாக மாறி

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# உக்ரைனுக்கான புலனாவுத் தகவல்களையும் நிறுத்தியது அமெரிக்கா

கடந்த வாரம் அமெரிக்காவின் வெள்ளை மாழிகையின் ஒவல் அலுவலகத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பிற்கும் உக்ரைன் அதிபர் வொலமிடீர் செலன்ஸ்கிக்கும் இடையில் இடம்பெற்ற காரசாரமான வாக்குவாதத்தை தொடர்ந்து உக்ரைனுக்கான ஆயுத வினியோகத்தை நிறுத்திய அமெரிக்கா தற்போது உக்ரைனுக்கு வழங்கப்படும் புலனாய்வுத் தகவல்களையும் நிறுத்தியுள்ளதாக அமெரிக்காவின் புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏயின் தலைவர் ஜோன் ரட்கிளிப் கடந்த புதன் கிழமை தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவினால் முன் வைக்கப்பட்ட அமைதித் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# வேகமாக அதிகரித்துவரும் மனிதர்களின் உடல்பருமன் – உலக நாடுகள் கவலை

உலகின் மக்கள் தொகையில் அரைபங்கிற்கு மேற்பட்டவர்கள் அதிக உடல்பருமன் கொண்டவர்களாக 2050 ஆம் ஆண்டில் இருப்பார்கள் எனவும், மூன்றில் ஒரு பங்கு சிறுவர்களும் அதிக உடல் எடை கொண்டவர்



களாக இருப்பார்கள் எனவும் The Lancet என்ற சஞ்சிகை தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட உடல்பருமன் சுட்டெண்ணில் Body Mass Index (BMI) 25 புள்ளிகளுக்கு மேல் உள்ளவர்கள் அதிக எடை கொண்டவர்களாகவும், 30இற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்டவர்கள் மிக அதிக எடை (obesity) கொண்டவர்களாகவும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இந்தியாவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் கவலை தருகின்றது – ஐநா அறிக்கை

இந்தியாவில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் எமக்கு கவலை தருகின்றது. அங்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுகின்றனர், எழுந்தமானமாக கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் இயங்குவதற்கான ஒரு பொதுவான வெளி அங்கு இல்லை, காஸ்மீரிலும் நடக்கின்றது. மணிபூரில் இடம் பெறும் வன்முறைகளை தடுப்பதற்கு இந்திய அரசு பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.




அங்கு மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இந்திய அரசு முன்வரவேண்டும் என கடந்த திங்கட்கிழமை (3) ஜெனீவா

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# தமிழர்களை புறக்கணித்த ஐ.நாவும் இணைத்தலைமை நாடுகளும்

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 58 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் என்னும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றங்கள் தொடர்பில் அதன் தலைவர் வோல்கர் டேர்கின் வாய்மொழி மூலமான அறிக்கை கடந்த திங்கட்கிழமை(3) வெளியிடப்பட்டுள்ளது.

வழமைபோலவே இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு புதிய அரசின் வரவு ஒரு சரியான சந்தர்ப்பம் என தெரிவித்துள்ளார் டேர்க். அனைத்துலக சமூகத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் இலங்கை அரசுகள் காலம் காலமாக அமைத்து வரும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமல்போனோர் அலுவலகம் போன்றவற்றையும் அவர் வரவேற்றத் தவறவில்லை.



அதேசமயம், இலங்கையில் தேசிய ஒற்றுமையை மேம்படுத்தப்போவதாக தெரிவித்த அனுர அரசின் கொள்கைகளையும் அவர் பாராட்டியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புதிய அரசு மேற்கொள்ளும் விசாரணைகளை பாராட்டியுள்ள அவர் கடந்த கால மனித உரிமைகள் மீறல்கள் குறித்த சுயாதீன விசாரணைகளுக்கும் வலியுறுத்தியிருந்தார்.

வலிந்து காணாமல்போனோர் தொடர்பில் அதன் நடைமுறைகளை மீண்டும் இலங்கை அரசு அமைத்துள்ள செயற்திறனற்ற காணாமல்போனோர் அலுவலகத்திடம் விட்டுவிட்டார். பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், நிகழ்நிலைக் காப்புச்சட்டம் ஆகியன திருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர் வடக்கு கிழக்கில் பொது அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் மீதான இலங்கை அரசின் கண்காணிப்புக்கள் தொடர்பிலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

அதாவது இந்த அறிக்கையில் எதுவும் புதிதாக இல்லை என்பதுடன், தமிழர்கள் என்ற சொல்லும் தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கையினுள் ஏதோ கலவரம் ஏற்பட்டது போலவே வழமைபோல சித்தரிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், தமது பூகோள அரசியல் நலன்களுக்காக அமெரிக்கா தலமையில் இலங்கை மீது தீர்மானத்தை கொண்டுவந்த இணைத்தலமை நாடுகளான பிரித்தானியா, கனடா. மலாவி, வடமசடோனியா, மொன்ரோநீக்ரோ ஆகிய நாடுகள் சார்பில் பிரித்தானியாவின் ஐ.நாவுக்கான தூதுவர் எலியனொர் சான்டேர்ஸ் வெளியிட்ட அறிக்கையிலும் தமிழ் மக்கள் மீதன இனஅழிப்பு அல்லது அவர்கள் மீதான மனித உரிமை மீறல்கள், தொடர்ந்து இடம்பெறும் அடக்குமுறைகள் குறித்து எதுவும் இடம்பெறவில்லை. வோல்கரின் அறிக்கையை வரவேற்றுள்ள இணைத்தலமை நாடுகள், இலங்கையின் புதிய அரசை பாராட்டியுள்ளதுடன், காணிகளை விடுவிப்பது, இனநல்லிணக்கப்பாடு, வடக்கு கிழக்கில் இறந்தவர்களை நினைவுகூருவதை அனுமதிப்பது, வீதித் தடைகளை அகற்றுவது குறித்து தெரிவித்துள்ளது. இவற்றை புதிய அரசு செய்ய முற்படுவதை வரவேற்றுள்ளது.

இலங்கையின் அரசியல் யாப்புக்கு உட்பட்டு அதிகாரங்களை பரவலாக்கவேண்டும், பயங்கர வாதத் தடைச்சட்டத்தை மாற்றவேண்டும், அதன்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# உள்ளூராட்சித் தேர்தலை ஈழத்தமிழரின் மக்களாணை ஈழத்தமிழரின் இறைமையைப் பேணுதலுக்கேயென நிரூபிக்க எதிர்கொள்க

யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இந்தியாவின் 'த இந்து' ஆங்கில நாளிதழின் ஊடகவியலாளர் மீரா சிறிநிவாசனுக்கு 04.03.2025இல் அளித்த செவ்வியில், "சிறிலங்கா அரசாங்கம் வடக்கும் கிழக்கும் தங்களுக்கு மக்களாணையைத் தந்துள்ளதாகத் திருப்பித் திருப்பி குறிப்பிட்டு வரும் நிலை மாற்றப்பட வேண்டும்" என்று மிக முக்கியமான அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு கிழக்கில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியமையை மையப்படுத்தி அதனை வடக்கும் கிழக்கும் தங்களுக்கு தந்த மக்களாணையாக தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்தி சிறிலங்கா அரசத்தலைவர் அநுரகுமர திசநாயக்காவின் தலைமையில் சிறிலங்கா நாடாளுமன்றம் புதிய அரசியலமைப்பு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உட்பட தாங்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட வாக்குப் பலம் கொண்டு நிறைவேற்றும் எல்லாச் சட்டங்களுக்கும் ஈழத்தமிழர்களின் மக்களாணையும் இருந்தது என்று, ஈழத்தமிழரின் உள்ளக தன்னாட்சி உரிமையில் அதனை ஈழத்தமிழர் ஏற்கின்றார்கள் என உலகில் நிறுவி ஈழத்தமிழர்கள் தங்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அனைத்துலக சட்டங்களாலும் சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறைகளை எதிர்த்து தன்னாட்சி வாழ்வைப் பெற இயலாத நிலையைத் தோற்றுவிப்பர்.

ஈழத்தமிழர் இன்று யுத்தம் ஏதுமின்றியே சிறிலங்காவால் அடிமைகளாக மாற்றப்படும் அபாயத்தைச் சட்டம் படித்தவர் என்ற முறையில் உணர்ந்த சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஈழத்தமிழரின் மக்களாணை தேசிய மக்கள் சக்திக்கு இல்லை என்பதை ஈழத்தமிழரின் 18 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 10 உறுப்பினர்கள் ஈழத்தமிழ்த் தேசியத்துக்கு விழுந்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்ற சரியான உண்மையைச் சரியான நேரத்தில் வெளிப்படுத்தி ஈழத்தமிழர்களின் இறைமை அனைத்துலகச் சட்டத் தகுதியை இழக்கும் பேரபாயத்தில் இருந்து காத்துள்ளார் என்பதை இலக்கு தெளிவுபடுத்த விரும்புகிறது. ஆயினும் தமிழரசுக்கட்சியினர் தமிழர் சனநாயகக் கட்சியின் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனையும் சேர்த்து தாங்கள் உள்ளூராட்சித் தேர்தலில் பதவிகளைப்பெற ஒரு கூட்டணியை உருவாக்க முயலும் செயற்பாடானது இன்றைய ஈழத்தமிழரின் இறைமைக்கு ஆபத்தான கட்டத்தில் சிங்கள அரசுக்குச் சாதகமாகச் செய்யும் செயலாகவே இலக்குக்குப் படுகிறது. இதனாலேயே உள்ளூராட்சித் தேர்தலை ஈழத்தமிழரின் மக்களாணையை ஈழத்தமிழரின் இறைமையைப் பேணுதலுக்கேயென ஈழத்தமிழர்கள் வாக்குகளால் உறுதிப்படுத்தி நிரூபிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விவேகமான தலைமையில் இணையும்படி இவ்வாசிரிய தலையங்கத்தால் இலக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு ஈழத்தமிழர்கள் வாக்களித்தது ஈழத்தமிழ்த் தேசிய அரசியலுக்கு எதிராக அல்ல தாங்கள் உட்பட ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கு அவர்கள் மக்களுக்கு அளித்து வந்த தேர்தல் கால வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதில் காட்டிய அக்கறையின்மைக்கு பாடம் புகட்டவே என்பதைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தனது செவ்வியில் உண்மையும் நேர்மையுமான முறையில் உலகுக்குத் தெளிவுபடுத்தி, இதனை தமிழ்த்தேசியத்தை முன்னெடுக்க விரும்பும் ஈழத்தமிழரின் அரசியல் கட்சிகள் தமக்கு விழுந்த மரணஅடி என உணர்ந்து இன்று ஒற்றுமையாகச் செயற்படுவதைத் தவிர வேறு வழியெதுவும் இல்லையெனக் கூறியமைக்கு அவருக்கு இலக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறது. அநுரகுமர திசநாயக்கா நாட்டின் முதன்மையான பிரச்சனை இனவெறியென்று இனவெறியைத் தான் இலங்கையில் ஒழிக்கப் போவதாக அடிக்கடி பேசுவதை வரவேற்கின்றோம். ஆனால் பேச்சோடு மட்டும் நின்றால் போதாது இனவெறியை உருவாக்கும் ஒற்றையாட்சி முறைக் கட்டுமானங்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். சமஸ்டி என்பத பிரிவினை அல்ல. ஒரு நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் ஒவ்வொருவரையும் பங்களிக்க வைக்கும் முறைமை. இதனை உணர்ந்து அநுரகுமார திசநாயக்கா செயற்பட்டாலே அவரால் இனவாதத்தை ஒழிக்க முடியும் என்பது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செவ்வியில் கூறியமை இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின் உண்மைநிலையைச் சிங்களப் பெரும்பான்மையினர் உணரவைத்த செயற்பாடாக உள்ளதென்பதையும் இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

மேலும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பாளர் நியமனங்கள் பெறப்படும் இவ்வாரத்தில் 2025ம் ஆண்டுக்கான அனைத்துலகப் பெண்கள் நாள் ஐக்கிய நாடுகள் சபையினால் 08.03.25 இல் "எல்லாப் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும்: உரிமைகள் சமத்துவம் சக்தியளித்தல்" என்ற இவ்வாண்டில் செயற்படுவதற்கான மையக்கருவுடன் முன்னெடுக்கப்படுகின்ற இந்நேரத்தில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஈழத்தமிழ்ப் பெண்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே முன்னெடுக்கக் கூடிய வகையில் எல்லா மாநகரசபைகள் நகரசபைகள் கிராம சபைகளிலும் உறுப்பினர்களாகத் தெரிவாகக் கூடிய முறையில் இவ்வாரத்தில் கட்டுப்பணம் செலுத்துகின்ற பொழுது செயற்படுமாறும் இலக்கு பணிவாக வேண்டுகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு ஈழத்தமிழ்ப் பெண் உறுப்பினர் கூடத் தெரிவாக முடியாது போன வரலாற்றுத் தவறை இது ஓரளவுக்குத் தவிர்க்கும் என்பதும் இலக்கின் எண்ணமாக உள்ளது. மேலும் உள்ளூராட்சி என்பதே ஒரு நாட்டின் பாதுகாப்பான அமைதியான வாழ்வினதும் வளர்ச்சிகளதும் முதுகெலும்பு என்பதால் இந்நேரத்தில் ஒவ்வொரு வட்டாரத்தின் தேவைகளையும் தெரிந்த மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்களை வேட்பாளர்களாக நியமிக்காவிட்டால் நிச்சயமாக தமிழ்த்தேசியப் பிரதிநிதித்துவம் குறைவடையும் என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

இவ்விடத்தில் சிறிலங்காவின் மனித உரிமைகள் நிலை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கருத்துத் தெரிவித்த அனைத்துலக யூரர்கள் ஆணைக்குழுவின் அனைத்துலகச் சட்ட ஆலோசனைப்பிரிவின் பணிப்பாளர் சான்ரா இபால் கடந்த கால மீறல்கள் குறித்து உள்ளக பொறிமுறை மூலம் இதுவரை பொறுப்புக் கூறல் உறுதிப்படுத்தப்படாது இருப்பது மீறல் குற்றங்கள் குறித்து ஆராய்வதற்கான தன்முனைப்பு இல்லை என்பதையும் அதற்கு உள்ளகப் பொறிமுறை போதுமானது அல்ல என்பதையும் தெளிவுபடுத்தினார். முன்னாள் சிறிலங்கா அரசத்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் அல்ஜசீராச் செவ்வி சிறிலங்கா அரசியல் தலைமைகள் எவருக்கும் மீறல் குற்றங்களை ஆராய்வதற்கான தன்முனைப்பு சிறிதும் இல்லையென்பதை இவ்வாரத்தில் உலகுக்கு மேலும் தெட்டத் தெளிவாக்கியது. இத்தகைய முடிபுகளை மக்கள் மயப்படுத்தி அனைத்துலக மக்களின் பலம் கொண்டு வெளியகப் பொறிமுறையை பொறுப்புக் கூறலுக்குக் கொண்டு வரச் செய்ய வேண்டும் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

இறுதியாக அமெரிக்க அரச அதிபரின் அரசியலால் வேகமாக மாறிவரும் புதிய உலக அரசியல் முறைமையில் ஐரோப்பிய இராணுவத்தின் உருவாக்கத்துக்காக ஐரோப்பிய படைத்தலைமைகள் எல்லாம் பாரிசில் இணைக்கப்பட்டும் தற்பாதுகாப்பு பாதுகாப்புச் செலவுகளுக்கு அதிக நிதிகள் ஒதுக்கப்படும் இன்றைய சூழலில் ஈழத்தமிழர் இறைமையைப் பேணுவதற்கான பலமும் வளமும் பொருந்திய சிவில் சமுகத்தவர்கள் ஊடகத்தறையினர் கல்வியாளர்கள் பேரவையொன்றின் அவசியத்தையும் மீளவும் மீளவும் இலக்கு நினைவுறுத்த விரும்புகிறது.

**ஆசிரியர்**

# பெண்மைக்கு வாழ்த்துகள்

பங்கய மென்கரம் பற்றி வளர்த்திடும்
பாலர்நாம் ஒன்றாகக் கூடிநின்றோம்
சங்கு முழங்கிடப் பொங்கு மவர்புகழ்
பாடிநல் வாழ்த்துகள் கூறுகின்றோம்

வாழத் துடித்திடும் பாலரைத் தாங்கியே
தாலாட்டி ஆற்றிடும் பெண்கள் உள்ளம்
ஆளும் மதியுடன் அறிவு வளர்த்தவர்
வாழ்வு வளம்பெற வைத்துவிடும்

மதியை வளர்த்திடும் அறிவைப் பெருக்கியே
மடைமையைத் தகர்த்திடும் பெண்கள் உள்ளம்
புதிய முறையினில் சிந்தனை விரிந்திடப்
புதுமைகள் கூறியெம் உளம் வளர்க்கும்

நோயினில் வாடிடும் மக்களைக் காத்திடும்
தாயன்பைத் தாங்கிடும் பெண்கள் உள்ளம்
பாயினில் படுக்கையில் பரிவுடன் னமர்ந் தந்த
ஆவியைக் காத்திடத் துடிதுடிக்கும்

மானத்தைக் காத்திடும் போரி லிணைந் தொன்றாய்
மாற்றவர் மடக்கிடத் துடிக்கும் உள்ளம்
தேனமுதத் தமிழீ ழம்படைத்திட
தெளிவுடன் போரிடும் தியாக வெள்ளம்

குண்டுகள் சன்னங்கள் அநாதைக ளாக்கிய
குஞ்சுகள் துயரினைத் துடைக்கும் உள்ளம்
மண்டியிடும் மன மடைமையைத் தடுத்துநல்
மாண்பினைக் காட்டிடும் தியாக வெள்ளம்

**மாரீசன்**




# சீன இனவிவகார அமைச்சரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ வரவு

# ஈழத்தமிழர் இறைமையைப் பாதிக்குமா?

வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் **ஆர். ராம்**

**அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக் கள நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் ஆர். ராம் அவர்கள் முன்வைத்த கருத்துகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**இனப்பிரச்சினை தொடர்பில் சீனா சிங்கள அரசு சார்பாக ஒரு முடிவு எடுக்குமாக இருந்தால் இது சர்வதேச சட்ட பிரச்சனைக்கு உட்பட்ட விஷயமாகவும் பார்க்கலாம் அல்லவா?**

உதாரணத்துக்கு ஜெனிவா விவகாரத்தின் போது, கொழும்பில் இருக்கின்ற தூதுவரகத்தில் சீன தூதுவரை இரண்டு மூன்று தடவைகள் நான் நேரடியாக சந்தித்து பேசிய பொழுது அவர்கள் மிகத் தெளிவாக சொல்லுகின்ற விடயம், இலங்கையுடன் இருதரப்பு உறவுகளைதான் வைத்திருக்கிறார்களே தவிர அவர்களைப் பொறுத்த வரையில், தமிழர்களுடன் ஒரு உறவையும் சிங்களவர்களுடன் ஒரு உறவையும் முஸ்லிம்களுடன் ஒரு உறவையும் பேணுவது கிடையாது என்பதே. ஆகவே ஜெனிவாவில் பொறுப்புகூறல் விடயத்தில் ஒவ்வொரு தடவையும் சீனா எதிராக நின்றுள்ளது. அதன் பிறகு நீங்கள் வடக்கு, கிழக்குக்குச் சென்று தமிழ் மக்களை அரவணைப்பதற்கு முற்படுகிறீர்கள் இது முரண் நகையான விடயம். தமிழர்கள் உங்களை நெருங்காதிருப்பதற்கு இது ஒரு பிரதான காரணம் என்று சீன தூதுவரிடம் கேட்ட பொழுது சீனா எப்பொழுதுமே ஸ்டேட் டு ஸ்டேட் கனெக்டிவிட்டி உறவைத்தான் முக்கியத்துவமாக கொள்கிறதே தவிர இனங்கள் சார்ந்த முக்கியத்துவத்தை கொள்ளவில்லை என சீன தூதுவர் கூறினார். சீனாவினுடைய கருத்து இப்படி இருக்கின்ற பொழுது இன விவகாரங்கள் சம்பந்தமான அமைச்சர் வந்து இலங்கையில் பல்வகமை பல்லினமை இருக்கின்றதை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கோ தலையீடுகளை செய்வதற்கோ நிச்சயமாக அவருடைய வருகை அமையாது.

மேலும் இலங்கையில் இருக்கின்ற சீன தூதரகத்தினுடைய மொழி, சீன கலாசாரம், சீன தொல்பொருள், சீன கற்கைகள் போன்ற பல விடயங்களும் அவர்கள் சீன கலாசார அமைச்சுக்களால் நேரடியாக இலங்கையின் கலாசார அமைச்சுக்களால் தான் நகர்த்திக் கொண்டு இருக்கிறார்கள். இதனை விட இயல்பாகவே பௌத்தம் சார்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் ஒரு இனம் புரியாத ஒரு உறவு வந்திருக்கிறது. அவர்களும் பௌத்த மதத்தை நேசிக்கிறார்கள். இதனை விட கிட்டத்தட்ட 2000 சீனர்கள் சிங்கள மொழியை கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. யாழ்பாணம்,வவுனியா பல்கலைக்கழங்களைத் தவிர, ஏனைய அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கன்பியூசியஸ் இன்ஸ்டிடியூட் என்று சொல்லப்படுகின்ற மெண்டரின் மொழியை கற்பிப்பதற்கான நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.



**கிழக்கு பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளதா?**

கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதுவரையில் வெளிப்படையாக உருவாக்கவில்லை. ஆனால் அது இன்னொரு வழியில் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது சீனாவினுடைய யுனான் தேசிய பல்கலைக்கழகத்துக்கும் கிழக்கு பல்கலைக் கழகத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற அடிப்படையில் மாணவர்கள் பரிமாற்றம் மொழிக்கல்வி மொழி ஆளுகை விருத்தி போன்ற விடயங்கள் எல்லாம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. ஆகவே திறன் மேன்பாடு சம்பந்தமான ஒப்பந்தமாக இருந்தாலும் கூட அதற்குள் அபிவிருத்திகளுக்கு அப்பால் இந்தமாதிரியான விடயங்கள் எல்லாம் இருக்கிறது.

கலை கலாசார பரஸ்பர புரிந்துணர்வு பகிர்வுகள் போன்ற விடயங்கள் எல்லாம் இருக்கிறது. ஆகவே அதற்குள்ளால் அவர்கள் கொண்டு வருவார்கள். இதனை விட இலங்கையில் இருக்கின்ற லுமினி கல்லூரி, ஆனந்தா கல்லூரியில் தொடங்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது பாடசாலை மட்டத்திற்குள் சீன மொழி கல்வி மிகத் தீவிரமாக கொண்டு வரப்படுகிறது. இதனை விட இலங்கையில் இருக்கின்ற சீன கலாசார மையம் சீன மொழி கற்பவர்களுக்கு விசேட சலுகைகள் அதாவது மாணவர்களாக இருந்தால் இலவசமாக அதனை விட தொழில்மையாளர்கள் இருந்தால் விசேட சலுகைகள் வழங்கப்படுகிற ஒரு நிலைமை காணப்படுகிறது.

**இனப்பிரச்சனையில் ஈழத் தமிழர்களுடைய இராஜதந்திரம் சீனாவைப் பொறுத்த வரையில் எப்பட்டி இருந்திருக்க வேண்டும்? அல்லது இனி மேல் எப்படி இருக்க வேண்டும்?**

தமிழர் அரசியலைப் பொறுத்தமட்டில் நாங்கள் யாராக இருந்தாலும் அது சிங்களவர்களாக இருக்கலாம் மிகக் கொடுங்கோலானவர்களாக இருக்கலாம் யாராக இருந்தாலும் நாங்கள் முதல் எங்களுடைய கொள்கை, பிரச்சனை, எதிர்பார்ப்பு, தீர்வு ஆகியவற்றை முன்வைத்து இதை நோக்கித் தான் நாங்கள் செல்கின்றோம் என்ற உரையாடலை செய்ய வேண்டும் என்பது என்னுடைய நிலைப்பாடு.

ஆனால் சீனாவுடன் உரையாடல்களை செய்தால் அல்லது சீனாவுடன் ஒரு உறவுகளை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை அமைதியான அரசியல்வாதி, ஜனநாயகம் மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்தும் தலைவர் என்று முத்திரை குத்திவருகின்றார் இலங்கை ஒரு வன்முறையற்ற நாடு என்றும், முன்னேற்றம் மற்றும் நல்லிணக்கத்திற்காக செயற்படுகிறது என்றும் கதையை கவனமாக வடிவமைத்துள்ளார் அதனை அவர் உலகிற்கு கூறுகிறார். இருப்பினும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, அவரது வார்த்தைகள் யதார்த்தத்தின் கொடூரமான கேலிக்கூத்தாகும். நாம் நடந்து செல்லும் எமது நிலம் நமது மக்களின் இரத்தத்தில் நனைந்துள்ளது -165,000 மற்றும் அதற்கு மேற்பட்டோர் அங்கு இடம்பெற்ற இனப்படுகொலையில் கொல்லப்பட்டுள்ளனர், அதை அவர் வெறும் சம்பவமாக குறைக்க முயற்சிக்கிறார்.

**ரணில் விக்கிரமசிங்கவின் கோட்பாடு என்ன?:**

போர்க்குற்றங்களுக்கு வெள்ளையடித்தல், இனப்படுகொலை என்பதை மறைத்தல், மற்றும் இன அழிப்பு செய்த அரசைப் பாதுகாத்தல். அவர் சர்வதேச சமூகத்திற்கு ஏற்ப இராஜதந்திர தொனியில் பேசுகிறார், ஆனால் அவரது தலைமை 77 ஆண்டுகளாக தமிழர்களை ஒடுக்கிய சிங்கள-பௌத்த வன்முறையின் அதே கட்டமைப்புகளினால் தான் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் துன்பங்களை வேண்டுமென்றே அழித்தல் என்பன விக்ரமசிங்கேவின் சொல்லாட்சியின் மிகவும் எரிச்சலூட்டும் அம்சம். அது வரலாற்றை மீண்டும் எழுதும் அவரது முயற்சியாக இருக்கலாம். தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தை வெறும் ஒரு சம்பவம் என்று அவர் குறிப்பிடுகிறார், இது 2009 இல் தமிழ் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதை வேண்டுமென்றே மறைக்கும் செயல். ஆனால் இது ஒரு சம்பவம் அல்ல - இது பல தசாப்தங்களாக அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புகளின்உச்சக்கட்டமாகும்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் மே



போரை ஒரு உள்நாட்டுப் போர் என்று தொடர்ந்து குறிப்பிடுவதாகும், இந்த வார்த்தையை மெஹ்தி ஹசன் தனது நேர்காணலின் போது பயன்படுத்தினார். ஆனால் அங்கு நடைபெற்ற போர் ஒருபோதும் உள்நாட்டுப் போராக இருக்கவில்லை - அது தமிழர்களுக்கு எதிரான ஒரு தலைப்பட்சமான அழிப்புப் போராக இருந்தது, சர்வதேச சக்தி களின் ஆதரவுடன் இலங்கை அரசு தனது முழு இராணுவ பலத்தையும் பயன்படுத்தி பொதுமக்களைப் படுகொலை செய்தது.

உள்நாட்டுப் போர் என்பது ஒரு நாட்டின் அரசியல் கட்டுப் பாட்டிற்காகப் போராடும் இரண்டு சமமான தரப்பினரைக் குறிக்கிறது, ஆனால் இலங்கையில், அத்தகைய சம நிலை இல்லை. தமிழ் ஆயுதப்

# ரணில் விக்கிரமசிங்க:

## வஞ்சகத்தின் தலைவர் மற்றும் இனப்படுகொலையின் பாதுகாவலர்

**இலங்கையின் வன்முறை கலாச்சாரம்: ரணில் விக்கிரமசிங்கவின் பொய்களுக்குப் பின்னால் உள்ள யதார்த்தம் என்ன?**

இலங்கை வன்முறையற்ற நாடு என்ற விக்ரமசிங்கவின் கூற்று தமிழர்களின் வாழ்வின் அனுபவங்களுடன் ஒப்பிடும் போது ஒரு அப்பட்டமான அவமானம் என்பதுடன் பொய்யுமாகும் இலங்கை அரசு ஒருபோதும் வன்முறையற்றதாக இருந்ததில்லை என கூறுகின்றார் ஆனால் - 1956, 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் அரசால் நடத்தப்பட்ட இனப்படுகொலைகள் முதல் 2009 இல் முள்ளிவாய்க்கால் படுகொலையில் உச்சக்கட்டத்தை அடைந்த இனப்படுகொலைப் போர் வரை தமிழ் மக்களை திட்டமிட்டு அழிப்பதன் அடிப்படையில் தான் கட்டமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. இன்றும் கூட, தமிழ் நிலம் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது, தமிழ் பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள், தமிழ் ஆர்வலர்கள் மௌனமாக்கப்படுகிறார்கள், காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் தமிழ் குடும்பங்கள் தொடர்ந்து அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

இலங்கையில் விக்ரமசிங்கே எதை பாதுகாக்கிறார்? தமிழர்களுக்கு எதிராக வன்முறை தொடர்ந்து மேற்கொள்ளும் ஒரு அரசு, இரா ணுவ பலத்தின் மூலம் சிங்கள மேலாதிக்கம் பாதுகாக்கப்படும் ஒரு அரசு, மற்றும் தமிழர்களுக்கு இன்னும் நீதி மறுக்கப்படும் ஒரு அரசு. இவற்றை தான் அவர் பாதுகாக்கிறார். ஆனாலும், உலகத்தின் முன் நின்று அதனை வேறுவிதமாகக் கூற அவருக்குத் துணிச்சல் உள்ளது.

**இனப்படுகொலையைக் குறைத்து மதிப்பிடுதல்:**

மாதங்களுக்கு இடையில், 165,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர். பொதுமக்களுக்கான "பாதுகாப்பு வலையங்கள்" என்று அழைக்கப்பட்ட வலையங்களுக்குள் மக்கள் கூட்டமாக அழைத்துச் செல்லப்பட்டனர், ஆனால் அதன் மீது இலங்கை இராணுவம் இடைவிடாமல் குண்டுகளை வீசியது. மருத்துவமனைகள் மீது ஷெல் வீசப்பட்டன, பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டனர், சரணடைந்த தமிழர்கள் நேரடியாக சுட்டுக் கொல்லப்பட்டனர். குழந்தைகள் தங்கள் தாய்மார்களின் கைகளில் இருந்து பிடுங்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். இது ஒரு இனப்படுகொலை.

செல்வி **ரேணுகா இன்பகுமார்**
சட்டத்துறை மாணவி, அவுஸ்திரேலியா

இதை ஒரு சம்பவம் என்று அழைப்பதன் மூலம், விக்கிரமசிங்கே இந்த உண்மையை அழிக்க முயற்சிக்கிறார். அவரது வார்த்தைகள் வெறும் சொற்பொருள் விளக்கம் அல்ல - அவை தமிழ் இனப்படுகொலையை மறுக்க, சிதைக்க மற்றும் நிராகரிக்க மேற்கொள்ளப்படும் இலங்கையின் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாகும். பொறுப்புக்கூறலைத் தவிர்ப்பதற்கும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும், தற்போதைய அடக்குமுறை நிலையைப் பேணுவதற்கும் இலங்கை அரசு மேற்கொள்ளும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

இது ஒருபோதும் உள்நாட்டுப் போராக இருந்ததில்லை - அது ஒரு இனப்படுகொலையாகவே இருந்தது, இருந்ததும் ஆகும்.

இந்த திரிபுவாதத்தின் குறிப்பிடத்தக்க பகுதி, சர்வதேச ஊடகங்கள் இலங்கையின்

போராட்டம் என்பது பல தசாப்தங்களாக அர சால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், இனப்பாகுபாடு மற்றும் இனஅழிப்பின் ஒரு பிரதிபலிப்பாகும். இலங்கை அரசு சமமான எதிரியுடன் போரில் ஈடுபடவில்லை; அது இனப்படுகொலையையே மேற்கொண்டு வந்தது. 2009 ஆம் ஆண்டு போரின் இறுதி மாதங்கள் இதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தன - 165,000 தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர், மருத்துவமனைகள் மீது வேண்டுமென்றே குண்டுவீசப்பட்டன, சரணடைந்த பொதுமக்கள் கொல்லப்பட்டனர், மேலும் தமிழ் மக்களை அழிக்க பாலியல் வன்முறை ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.

2009 க்குப் பிறகும் இராணுவ ஆக்கிரமிப்பு, நில அபகரிப்புகள், கட்டாய காணாமல் போதல்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்றம் மூலம் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது. இலங்கையில் ஒருபோதும் உள்நாட்டுப் போர் நடந்ததில்லை - அது ஒரு இனப் படுகொலைதான், அந்த இனப்படுகொலை தற்போதும் நடந்து கொண்டிருக்கிறது. சர்வதேச சமூகம் இலங்கையின் குற்றங்களை வெள்ளையடிப்பதை நிறுத்தி உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்: இலங்கை ஒரு இனப்படுகொலை நாடு, ரணில் விக்கிரமசிங்கே போன்ற தலைவர்கள் அதன் தொடர்ச்சிக்கு உடந்தையாக உள்ளனர்.

**இலங்கை இனப்படுகொலையில் செழித்து வளரும் ஒரு அரசு**

விக்ரமசிங்கே ராஜபக்சே ஆட்சியிலிருந்து தான் வேறுபட்டவர் என்று கூறலாம், ஆனால் உண்மையில், அவர் அதே துணியிலிருந்து வெட்டப்பட்டவர். அவர் உண்மையிலேயே கடந்த காலத்திலிருந்து

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலும் !

# உரிமைக்கான தமிழ்த்தேசிய கட்சிகளும்!

**பா.அரியநேத்திரன்**

நீண்ட இடைவெளிக்கு பின்னர் கல்லில் நார் உரித்தாற்போல் உள்ளூராட்சி சபை தேர்தல் 2018 பெப்ரவரி 10ல் இறுதியாக நடைபெற்ற கலப்பு முறை உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு பின்னர் தற்போது ஏழு வருடங்களுக்கு பின்னர் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2025, மார்ச் 17, தொடக்கம் மார்ச் 20 வரை வேட்பு மனு ஏற்றுக்கொள்வதாகவும் கடந்த மார்ச் 03 தொடக்கம் எதிர்வரும் மார்ச் 19 வரை கட்டுப்பணம் செலுத்தும் காலம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசின் 159 பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியில் உள்ள அநுர அரசின் செல்வாக்கு மீண்டும் இலங்கையில் உறுதிப்படுத்தப்படுமா இல்லையா என்பது ஒருபுறம் இருக்க வடகிழக்கு தமிழ்மக்கள் எந்தவகையில் இந்த தேர்தலை பயன்படுத்துவார்கள் என்பதையும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.



ஒன்பதாவது ஜனாதிபதியாக 2024 ல் தெரிவான அநுராகுமார திசநாயக்கா இதுவரை பாராளுமன்றத்தில் ஆற்றிய அக்கிராசன உரையாக இருக்கலாம், விசேட உரையாக இருக்கலாம் இறுதியாக சமர்பித்த 2025 ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையாக இருக்கலாம், யாழ்ப்பாணத்துக்கு சென்று வல்வெட்டித்துறையில் வகுப்பு நடத்திய பாடமாக இருக்கலாம் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கையில் இனப்பிரச்சனை ஒன்று உள்ளது தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக அவர்கள் போராடியுள்ளனர் அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்று இவர் பேசியது இல்லை. ஏற்கனவே ஜனாதிபதிகளாக இருந்த ஜே ஆர், பிரமதாச, சந்திரிகா, மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில் ஆகியவர்கள் ஒரு சாட்டுப்போக்கிற்காக என்றாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்காவிட்டாலும் இல்லாவிட்டாலும் அப்படி ஒரு பிரச்சினை நாட்டில் உண்டு என்பதை குறிப்பிட்டே பேசியதை காணலாம்.



தேசிய மக்கள் சக்தி அரசானது அரசியல் தீர்வு விடயத்தில் முற்றாக மௌனம் காப்பது என்பது அவர்களுக்கு வடகிழக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கவேண்டும் என்ற அக்கறை அறவே இல்லை என்பதையே காட்டுகிறது. இப்படி அவர்கள் அக்கறை காட்டாவிட்டாலும் வடகிழக்கில் உள்ள தமிழர்கள் பலர் அவர்கள் மீது அக்கறைகாட்டுவது குறையவில்லை. இதேவேளை 2024 பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்தேசியகட்சிகள் கற்றுக்கொண்ட பாடத்தில் இருந்து இன்னும் திருந்தியதாகவும் இல்லை. ஒற்றுமை என்பதை பேச்சில் உச்சரித்துக்கொண்டு செயலில் வேற்றுமையாகவே தமிழ்த்தேசிய கட்சிகளின் செயல்பாடுகள் உள்ளன. இந்த உள்ளூராட்சி சபை தேர்தல்களிலும் இதுதான் நிலைமை தொடரப்போகிறது. தற்போது அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தல் தமிழ்தேசிய அரசியலில் ஒரு சவால் மிக்க தேர்தலாகவே அமையப்போகிறது குறிப்பாக தமிழ்த்தேசிய கட்சிகளின் போக்கு ஒருமித்து ஒரு சின்னத்தில் போட்டியிடக்கூடிய நிலை இல்லை.



ஏறக் குறைய தம்மை தமிழ்த்தேசிய கட்சிகள் என அடையாளப்படுத்தும் கட்சிகள் ஐந்தாக பிரிந்து உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடக்கூடிய சந்தர்ப்பமே உள்ளது. அதைவிட பல சுயேட்சை குழுக்களும் களமிறங்கப் போகின்றது. தேசிய மக்கள் சக்திக்கு பின்னாலும் வடகிழக்கில் பல தமிழ் இளைஞர்கள் செல்வது குறையவில்லை, ஏற்கனவே வடகிழக்கில் பொதுத்தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஆளும்தரப்புகளுக்கு ஆதரவாக செயல்பட்ட வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஈபிடிபி, கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் ரி எம் வி பி கட்சிகளும் உள்ளூராட்சி சபை தேர்தலை இலக்கு வைத்துள்ளன. அதேபோல் ரணிலின் சிலிண்டர், சஜீத்தின் ரெலிபோன், மகிந்தவின் மொட்டு என பலதரப்பட்ட கட்சிகள் வடகிழக்கிலும் தமிழர்களின் வாக்குகளை சிதறடிக்கப்போகின்றன. இந்த நிலையில் கலப்பு தேர்தல் முறை என்பதால் வடகிழக்கில் இறுதியாக 2018 ல் இடம்பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ்தேசிய கூட்டமைப்பு பெற்ற ஆசனங்களை விட இம்முறை பாரிய வீழ்ச்சியை சந்திக்கும் களநிலவரமே உண்டு. குறிப்பாக இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியில் உள்ள சிலரின் தனிமனித ஆதிக்கம், தலைக்கனம், நீண்ட காலம் தமிழரசுகட்சியில் செயல்பட்டவர்களை ஓரம் கட்டும் போக்கு என்பன இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த ஒரு சபையும் தனித்து ஆட்சி அமைக்க எந்த கட்சிகளாலும் முடியாமல் தொங்கு சபைகளாகவே அமையப்போகின்றது.

2024 ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பொது வேட்பாளரை ஆதரித்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை, கட்சியில் இருந்து நீக்குதல், அவ்வாறானவர்கள் உள்ளூராட்சி சபைகளில் வேட்பாளர்களாக போட்டியிட கூடாது என்ற நிபந்தனைகள் தனிமனித தமிழரசுகட்சி நிலை தொடர்வதும் தமிழரசுகட்சிக்கு எதிர்பார்த்த ஆசனங்களை பெறுவதில் சிக்கல் நிலை உண்டு. தமிழரசுகட்சி மத்தியகுழுவில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்த தமிழ் அக்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமே ஒழுக்காற்று நடவடிக்கை கையாளப்படுகிறது கடிதங்கள் அனுப்பப்படுகிறது. ஆனால் ஜனாதிபதி தேர்தலில் சிங்கள வேட்பாளர்களான ரணிலை ஆதரித்தவர்கள், அநுராவை ஆதரித்தவர்கள் தமிழரசுகட்சி உறுப்பினர்கள் சிலர் உண்டு. அப்படியான எவருக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை இல்லை விளக்கம் கோரி கடிதங்களும் அனுப்பபடவில்லை. சுருக்க மாக சொல்வதானால் சிங்களத்தேசியத்தை ஆதரித்தவர்கள் தியாகியாகவும், தமிழ்த்தேசியத்தை ஆதரித்தவர்கள் துரோகியாகவும் தமிழ் அரசுக்கட்சியில் மத்திய குழுவில் உள்ள சிலர் கருதுவதை காணலாம்.



வழமைக்கு மாறாக கொழும்பு மாவட்டத்திலும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசுக்கட்சி இம்முறை தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதாக கூறப்படுகிறது. இது வடகிழக்கு தமிழ் தேசிய கொள்கை அரசியல் வடகிழக்கு தவிர்ந்த மாவட்டங்களில் விரிவு படுத்துவதால் இணைந்த வடகிழக்கிற்கான சமஷ்டி அடிப்படையிலான கொள்கை மாறி ஒரே நாடு ஒரே தேசத்தை அங்கீகரிப்பதாக அதை தமிழரசுகட்சி ஏற்றுள்ளது என்பதை காட்டும் என்பதே உண்மை. உள்ளூராட்சி தேர்தல் முறையானது கலப்பு தேர்தல் முறை என்பதால் கட்சிகளில் செல்வாக்கை விட அந்த வட்டாரத்தில் மக்கள் செல்வாக்கை பெற்றவர்களே எந்த கட்சியில் போட்டியிட்டாலும், சுயேட்சை குழுவில் போட்டியிட்டாலும் தனிமனித செல்வாக்கும் இந்த தேர்தலில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வாய்புகள் உள்ளதால் தமிழ்த்தேசிய கட்சிகள் வேட்பாளர்களை தெரியும்போது இதனை கருத்தில் கொள்ளவதில்லை.

விகிதாசாரத்தேர்தல் எனின் கட்சிகள் செல்வாக்கை முதன்மைபடுத்தும் சந்தர்ப்பம் மாகாணசபை தேர்தல், பாராளுமன்ற தேர்தல்களில் காணப்பட்டாலும் உள்ளூராட்சி சபை தேர்தல் கலப்பு முறை என்பதால் ஊர் வட்டாரம் பிரதேசத்தில் பிரபல்யம் உள்ளவர்களுக்கு சந்தர்ப்பம் அதிகம் உண்டு. உள்ளூராட்சி தேர்தல் என்பது இம்முறை வடகிழக்கு தாயகத்தில் தமிழ்தேசிய கட்சிகளுக்கு படிப்பினையை தரக்கூடிய முடிவாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

• • •



# பெண்களின் உரிமையும் சமத்துவமும்

சசிகலா ஜீவானந்தன்
தஞ்சைப்பல்கலைக்கழக
முதுகலை மாணவி

"அச்சமும்; நாணும் மடனும் முந்துறுதல்;
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"
"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலன"

என பெண்மையின் குணநலன்கள் கூறுகின்றது தொல்காப்பியம். "பெண்ணாய்ப் பிறந்திட மாதவம் செய்திட வேண்டும் என்பார் சான்றோர்.

இன்றைய உலக மகளிர் தினமான இந்த சிறப்பு நாளை முன்னிட்டு பெண்களின் உரிமை சமத்துவம் மற்றும் பாலியல் வன்முறைகள் பணி இடத்தில் சமமாக மதிக்கப்பட்டு சமமான ஊதியம் வழங்கப்படாமை குழந்தைப்பிறப்பு உரிமை கல்வி உரிமை போன்ற விடயங்களில் பாரபட்சம் காட்டும் தறுவாயில் பெண்கள் எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும். இதற்காகவே இவ்வாண்டின் அனைத்துலகப் பெண்கள் நாளின் மையக் கருவாக " எல்லாப் பெண்கள் சிறுமிகளுக்கும் உரிமை-சமத்துவம் - சத்தியளித்தல்" என்பது ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேரத்தில் பெண்ணை அடித்துத் துன்புறுத்தல் மிரட்டுதல் கடுஞ்சொற்கள் கொண்டு பேசித்துன்புறுத்தல் போன்றன பெண்களை உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கும் செயல்கள் இவை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவை. இன்றும் பல இடங்களில் இந்நிலைமை தொடர்கிறது.

மேலும் பெண்கள் வீட்டு கௌரவம் பார்த்து மற்றவர்களுக்கு இவ்வாறாக தாம் நடத்தப்படுவது தெரிந்தால் தன் நெருங்கிய உறவுகள் வேதனைப்படும் என்ற காரணங்களுக்காகவே மறைத்து சகித்துக் கொண்டு என்னும் வாழ்கின்றனர். இவ்வாறானவை முற்றாக எம் சமுதாயத்திலிருந்து களைந்தெறியப்பட வேண்டியவை.

பெண்கள் தங்களை தற்பாதுகாத்துக் கொள்ள தற்பாதுகாப்புக்கலை பயின்று கொள்ளும் உரிமை சமுகப் பழக்கமாக வழக்கமாக மாற்றப்பட வேண்டும்.

இல்லங்களிலும் சமூகத்திலும் பெண்களின் கருத்து இரண்டாம் பட்சமாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. முதலில் அவரவர் வீடுகளில் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்க முன்வர வேண்டும். இதனால் சமுகம் தானகவே பெண்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும்.

பெண்கள் கல்வியறிவு இல்லாதிருத்தலே அவர்களுடைய உரிமைகள் நிலைநிறுத்தப்படாமைக்கு காரணமாகும். எனவே பெண்கள் கல்வியறிவு பெறுவதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும்.

பெண்கள்சாதனைப்பெண்களாகபரிணமித்துக் கொண்டிருந்தாலும் பெண்கள் சடங்கு சம்பிரதாயம் ஊர்ப்பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் ஆசாரங்கள் தீட்டுத்துடக்குகள் என அனுபவிக்கும் துன்பங்கள் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது இவ்வாறான நம்பிக்கைகள் ஓர் சபையில் பாதிக்கப்பட்ட பெண்களை துன்பத்தின் உச்சத்தில் நிறுத்துகின்றது. இவையும் ஓர்வகையில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளேயாகும். இவ்வாறான சமுதாயச்சிக்கல்களில் இருந்து எம்மைத்திடப்படுத்தி துணிவாக முடிவெடுத்து வெளிவரும் நாளே பெண்களுக்கான முழுச்சுதந்திரம் கிடைத்த நாளாகும்.

மற்றும் சங்ககால புலவர்களில் இருந்து இன்றைய கவிஞர்கள் வரை பெண்களை வர்ணிப்பது அவர்களின் புலமைத்திறனைக் காட்டினாலும் அங்கேயும் பெண் ஓர் காட்சிப் பொருளாகவே சித்தரிக்கப்படுகிறாள். இதுவும் ஓர் பெண் அடிமைத்தனப் போக்காகவே காணப்படுகிறது.



சங்க இலக்கியங்களில் பெண்கள் வீரமுடைய விவேகமுடையவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. அரசர்களுக்கு பெண்பாற் புலவர்கள் தூதுவர்களாகவும் பல புலமைத்திறனைக் கொண்டவர்களாகவும் விளங்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக ஔவையார் அதியமானுக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே தூது சென்று போரைத் தடுத்தவர். சங்க காலத்தில் பெண் உரிமைகள் ஒரளவு பேணப்பட்டதாக தெரிகிறது.

**தொல்காப்பியர் காலத்திலும் பெண் அடிமைத்தனம் இருந்ததா?**

" பயமும் நாணமும் அறியாமையும் முற்பட்டு நிற்றல் எப்பொழுதும் பெண்களுக்குரிய குணம்" என்பதில் இருந்து அறியலாம் என்னும் கருத்து உள்ளது. இதனைத் தொல்காப்பியம் எங்கு சொல்கிறது ஏன் சொல்கிறது என்று சிந்தித்தால் களவியலில் 95 வது நூற்பாவில் "பெருமையும் உரனும் ஆடுஉ மேன" எனத் தலைவன் களவு நெறியில் நிற்கையில் தான் தன்னுடைய பெருமையையும் உறுதியையும் காம வேட்கையால் இழந்திடக் கூடாது முறைப்படி அவளை ஊரறிய இல்லத்தலைவியாக ஏற்று அதன் பிறகே காம வேட்கைக்கு இடமளித்தல் வேண்டும் என்று கூறிவிட்டு அவ்வாறே தலைவியும் அச்சம் என்கிற தயக்கத்தையும் நாணம் என்கிற பழிக்கு அஞ்சுதலையும் மடம் என்கிற காமவேட்கை தூண்டுதலுக்கு இடம்கொடுக்காது அதனை அறியாதது போல இருத்தலையும் முந்தும் தன்மையினை இயல்பாகவே கொண்ட பெண்மை அவளை எடுத்த எடுப்பில் காமவேட்கைக்கு இடமளிக்க விடாது என்று எடுத்துரைக்கின்றார். இதனை உறுதி செய்வ தாக 97வது நூற்பா வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல் ஆக்கஞ் செப்பல் நாணு வரை இறத்தல் நோக் குவ எல்லாம் அவையே போறல் மறத்தல் மயக் கஞ் சாக்காடு என்றிச் சிறப் படை மரபினவை களவென மொழிப
என தமிழர் பண்பாட் டில் தலை வனதும் தலைவியதும் உள்ள உறுதி களவு நெறியில் உடற்புணர்ச்சியாகது உள்ளப்புணர்ச்சியாகப் பேணப்படல் வேண்டும் என்கிற சமுக கட்டமைப்பை சிறப்புடை மரபாகவே வெளிப்படுத்துகிறது.

ஆயினும் தொல்காப்பியத்தை முழுமையாக தமிழ் மாணவர்களுக்கு எடுத்து ரைத்து விளக்காது வட மொழியாளரும் மேற்குலகத்தவர்கள் தமிழர் பண்பாட்டின் உயர்வினை மாணவர்கள் மனதில் மறைத்திட இத்தகைய வலிந்து பொருள்கோடல் முறைமைகளைக் கையாண்டார்கள் என்று அறிய முடிகிறது.

பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாது என்ற வழக்கம் இருந்ததையும் தொல்காப்பியத்தில் பெண் அடிமைத்தனம் என்பாரும் உள்ளர். "முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை" எனப்படுகிறது. ஆனால் தலைவி தலைவனுடன் உடன்போக்குக்கு உடன்பட்டு வாழப்புறப்படுகையில் பாலை காலில் பிரிதல் ஏற்புடையதாகவும் அதாவது பாலை நிலத்தின் வழி பயணிக்கையில் தலைவன் தன்னுயிராகத் தலைவியைத் தாங்கிச் செல்லும் நடைவழிப்பிரிவு ஏற்புடையது. ஆனால் கலவழி பிரிதல் என்னும் படகில் கப்பலில் பயணிக்கும் பொருள்தேடித்தலைவன் செல்லும் பயணத்தில் தலைவியை அழைத்துச் செல்லல் அபாயகரமானது புதியதோர் இடத்தில் புதியதோர் பண்பாட்டினை எதிர்கொள்ளும் புலப்பெயர்வில் தலைவியைக் கொண்டு செல்வது ஆபத்தானது என்பதற்காகவே இந்நூற்பா பொருளதிகாரத்தில் 37வது நூற்பாவாக அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புண்கணீர் பூசல் தரும் என்னும் குறள் மொழி காட்டும்இலக்கியத்துக்குஇலக்கணமாகஇந்நூற்பா தலைவனின் தலைவி குறித்த கடமையினை வலியுறுத்தி எழுதப்பட்டதென்பது ஒவ்வொரு தமிழரும் அறிந்திருக்க வேண்டியவொன்றாக உள்ளது.

திருக்குறள் ஓர் பொதுமறையாக இருந்தும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# 2025ம் ஆண்டு அனைத்துலகப் பெண்கள் நாளுக்குரிய மையப்பொருளை ஈழத்துப் பெண்கள் எவ்வாறு முன்னெடுப்பது

முனைவர் **நீற்றா பற்றிமாகரன்**

இந்த ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலகப் பெண்கள் நாள் “எல்லாப் பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான உரிமைகள் சமத்துவம் சத்தியளித்தல்” என்ற மையப்பொருளை இவ்வாண்டுக்கான பெண்கள் உரிமைகளுக்கான செயற்றிட்டமாக முன்வைத்துள்ளது.

இந்த மையக்கருவை ஈழத்தமிழ்ப் பெண் களாகிய நாங்கள் தாயகத்திலும் புலத்திலும் நம் முடன் வாழும் எமது எல்லா ஈழத்தமிழ்ப் பெண்களதும் சிறுமிகளதும் உரிமைகள் சமத்துவம் சத்தியளித்தல் தொடர்பாக எவ்வாறு இவ்வாண்டில் முன்னிலைப்படுத்தலாம் என்பதையே சுருக்கமாக உங்களுடன் சிந்திக்க விரும்புகின்றேன்.

பெண் உரிமை என்பது உடற்கூற்று அமைப்பில் உள்ள கருவளத்தன்மை வேறு பாட்டை உச்சப்படுத்தி புறவாழ்வில் ஆணுக்கு முன்னுரிமை முதன்மை கொடுத்து பெண்ணின் வாழ்வை அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கமுறை களுக்கும் உள்ளாக்கி அவளை அடிமைப் படுத்தும் சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக முறைமைகளிலிருந்து விடுபடுவதற்கான பெண் ணின் பிரிக்கப்பட முடியாத மனித உரிமையாகும். இதனை முதலில் ஈழத்தமிழ்ப் பெண்கள் மனதில் இளைய வயது முதல் கல்வியாலும் கலைகளாலும் ஆழப்பதிய வைக்க வேண்டும். ஏனெனில் நடைமுறையில் குடும்பம் சமூகம் கல்விமுறைமை பொருளாதார முறைமை அரசியல் முறைமை ஆன்மிக முறைமை என்னும் ஆறு நிலைகளிலும் பெண் ஆணுக்குப் பணிவுடல் கொண்டவளாகவும் பணிவு உள்ளம் கொண்டவளாகவும் உருவாக்கப் படும் பழக்கம் ஈழத்தமிழர்களின் சமூக நடைமுறை வழக்கமாக உள்ளது.

இதனால் பெண் தானே தன்னை ஆணுக்குப் பணிவுடலும் பணிவு உள்ளமும் கொண்டவளாக வாழப்பபழக்கப்படுத்தப்பட்டு விடுகிறாள். பெண் ணுடைய விருப்புகள் அதற்கேற்ற தெரிவுகள் அதன் வழியான அவளின் வாழ்வின் திறன்கள் அவளின் வாழ்வின் மகிழ்ச்சி என்பன மறுக் கப்பட்ட ஒரு வாழ்வை தனது வாழ்வாகவே ஏற்று வாழ வேண்டிய சமூகச் சூழல் காரணமாக ஈழத்தமிழ்ப்பெண் மனஅழுத்தங்களுக்கும் மன நோய்க்கும் உள்ளானவளாக மிக இளவயது தொடக்கமே வாழும் நிலை பெருவழக்கமாகி நிற்கிறது. வெளியே தனது மனதின் ஏக்கங்கள் துன்பங்கள் விருப்புக்கள் வெறுப்புக்கள் வெளிப் பட்டால் அது தான் வாழும் குடும்பத்தின் உலக மதிப்பினைப் பாதிக்கும் என்கிற கருத்தியல் ஈழத்தமிழ்ப் பெண்களிடை நடைமுறையில் பலமாக நிலவுகிறது.

இந்நிலையில் எமது ஈழத்தமிழ்ப் பெண் களுக்கு அவர்கள் தங்களுடைய விருப்புக்கள் தெரிவுகள் உடன் வாழ்வதற்கான உள்ளப்பலம் கல்வி மூலம் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வுகள் வரை ஒழுங்கான பாடத்திட்டங்களின் வழி அளிக்கப்பட வேண்டும். பெண்களின் பிரச்சினைகளுக்கு பெண்களே குரல் கொடுக்கவும் பெண்களே ஒருங்கிணைந்து சங்கங்கள் அமைப்புகள் இயக்கங்கள் வழி தீர்வு காண்பதற்கான சமூக பொருளாதார அரசியல் ஆன் மிகச் செயற்பாடுகள் மீள் கட்டமைக் கப்படல் வேண்டும். இதற்கான ஆராய்ச்சிகள் முடிபுகள் அவற்றை முன்னெடுக்கும் செயற்றிட்டங்கள் காலத்துக்கு ஏற்ற வகையில் இடத்து க்கு ஏற்ற வகையில் திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைக் கப்படல் முக்கியம்.

இவ்வாறு பெண்களுக்கு அவர் கள் ஆண்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல சமத்துவ மானவர்களே என்கிற உள்ள உறுதி ஊட்டப்பட்டாலே சமத்துவம் என்பது நடைமுறைச் சாத்தியமாகும். இதற்கான சத்தியளிப்பு என்பது மதியாலும் நிதியாலும் வழங்கப்படுவதற்கு அறிவார்ந்த முறையில் உணர்ச்சிகளைக் கடந்து உணர்வுகளின் அடிப்படையில் சிந்திக்கும் செயற் படும் பெண்களின் சமூக ஒருங்கிணைப்பு முக்கிய மானதாகின்றது.

இந்த ஒருங்கிணைப்பின் வெற்றியிலேயே பெண் தன்னைத் தானே உணரவும் தனது உரிமைகளைத் தானே வெளிப்படுத்தவும் அதனை அடையத் தான் மற்றைய பெண்களுடன் இணையவும் இணைந்து செயற்றிட்டங்களை உரு வாக்கவும் முடியும்.

அத்துடன் இந்த வகையான பெண்ணு ரிமைக்கான சங்கங்களையும் அமைப்புக்களையும் இயக்கங்களையும் உறுதிப்படுத்தவும் செயற்பட வும் பெண்களுக்கு ஆண்கள் பக்கத்துணையாக மாற்றப்படுவதை ஆண்களின் வாழ்க்கைத்து ணைநலமாக உள்ள பெண்களே அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும்.

அதே வேளை நாட்டின் சட்டங்கள் நீதி முறைமைகள் அனைத்துலக சட்டங்கள் நீதிமுறை மைகள் பெண்ணுரிமைக்கு எதிராகக் கட்டமைக் கப்படும் பொழுதே போராடி மாற்றவேண்டும் இல்லையேல் கட்டமைக்கப்பட்ட பின்னரும் உறுதியாகப் போராடி அதனை மாற்றும் வரை ஓயாதிருக்க உறுதி எடுக்க வேண்டும்.

இதற்குச் சமகால உதாரணமே மூவாயி ரத்துக்கு மேற்பட்ட நாட்களாக 2009ம் ஆண் டுச் சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பு படை நடவடிக்கையின் பொழுது வலிந்து காணா மலாக்கப்பட்டட தங்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கான நீதியின் குரலாக அத்தகைய மனிதாயத்துக்கு எதிரான குற்றங்க ளைச் செய்தவர்கள் தண்டனை நீதிக்கு உள்ளாக் கப்பட வேண்டும் என்றும் அதனால் பாதிக்கப் பட்டவர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கு பரிகாரநீதி கிடைக்க வேண்டுமென்றும் உள்ள உறுதியுடன் முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் போராட்டக்களத்திலேயே நோய்வாய்ப்பட்டும் மன அழுத்தங்களாலும் உயிர் இழந்த சோக வரலாற்றுக்கு மத்தியிலும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான குரலாக தாயகத்திலும் உலகெங்கும் வாழும் ஈழத் தமிழ்ப்பெண்கள் இந்த 2025ம் ஆண்டு அனைத் துலகப் பெண்கள் நாளான இன்று தம்மாலியன்ற வழிகளில் எல்லாம் உழைக்க உறுதி எடுப்பதே “எல்லாப் பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான உரிமைகள் சமத்துவம் சத்தியளித்தல்” என்கிற ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வாண்டுக்கான அனைத்துலகப் பெண்கள் நாளுக்குரியமையப் பொருளை இவ்வாண்டு முழுவதற்கும் முன் னெடுப்பதற்கான செயற்றிட்டங்களை உருவாக்கு வதற்கான முதற் படியை உருவாக்கித் தரும். ஆம்! முதலில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்டு அவர்களுக்கான சத்தியளிப்பு கிட்டும் பொழுது அடுத்து இனி மேலும் இத்தகையன நிகழாதவாறு தடுப்பதற்கான வழிகளையும் அனைத்துலகத் துணைகளையும் உறுதி செய்வதற்கான அடுத்த கட்டத்தை நோக்கி நகரமுடியும். கூடவே பெண்களின் தங்கி வாழாத தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அவர்களது விருப்புக்கள் வழி அவர்கள் தெரிவுகளை மேற் கொள்ளக் கூடிய தளங்களை உருவாக்கி விரிவு படுத்த வேண்டும்.

அனைத்துப் பெண்களும் சிறுமிகளும் சமூகப் பாதுகாப்பும் பொருளாதார மறுமலர்ச்சியும் அரசியல் உறுதிப்பாடும் ஆன்மிகத் துணையும் பெறுவதற்கான குறுகிய நடுத்தர நீண்டகால செயற்றிட்டங்களை உருவாக்க முயலுவோம். சொல்லுவது கேட்கக் காதுக்கு இனிமையாக இருக்கும். ஆனால் இதனைச் செயற்படுத்த உறுதி யும் உழைப்பும் அர்ப்பணிப்பும் தேவை என்பதை வலியுறுத்திட விரும்புகின்றேன்.

• • •

# மகளீர் தினம்:

# தொடரும் பெண்களின் உரிமைக்கான போராட்டம்

ஹஸ்பர் ஏ ஹலீம்




சர்வதேச அளவில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வந்தாலும் அது ஒவ்வொரு நாட்டைப் பொறுத்தும் வித்தியாசமாக உள்ளது.

1977ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடத் தொடங்கியது. அதே தினத்தை ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் பெண்மையைக் கொண்டாடும் நாளாக அறிவித்தன. 1908ல் ஆரம்பித்து 1910ம் ஆண்டு சர்வதேச பெண்கள் தொழிலாளர் தினம் என்று ஆரம்பிக்கப்பட்ட இந்த கொண்டாட்டம் இப்போது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 08ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் தினத்திற் கான இவ்வருடத்திற்கான கருப்பொருளாக "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கும் உரிமைகள் சமத்துவம் சமனாக அதிகாரமளித்தல்" எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படுகிறது.

சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து, எமது நாட்டில் "சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்ச்சி' நடத்தப்படுகிறது, இம்முறை '"நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதில் - அவள் ஓர் வலுவான வழிகாட்டி'"என்ற தொனிப்பொருளில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையை பொறுத்தமட்டில் தேசிய மகளிர் தின வைபவ நிகழ்ச்சி 2025 மார்ச் 02 ஆம் திகதி ஆரம்பித்து, 2025 மார்ச் 8 ஆம்திகதி வரை அனுஷ்ரிக்கப்படுகின்றது.. இதில் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு கருப்பொருளின் கீழ் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது பெண் தொழில் முயற்சியாண்மையால் நாட்டை கட்டியெழுப்புவோம், வினைத் திறன் மிக்க தொழிற்படையை உருவாக்குதல் உள்ளிட்ட எட்டு விடயங்களை முன்வைத்து இம் முறை தேசிய மகளிர் தின வைபவத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாயகத்தில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இது தவிர பெண்களுக்கு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள் பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்படுகிறது.பெண் பிள்ளைகள் இளவயது திருமணத்தை குறைத்து கல்விமட்டத்தை அதிகரிப்பதன் ஊடாகவும் மற்றும் சுயதொழில் ஒன்றை மேற்கொண்டு வருமானத்தை உயர்த்துவதன் மூலமாகவும் மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுடன் நிலையான எதிர்காலத்தையும் ஒவ்வொரு பெண்ணும் உருவாக்கலாம். இது குறித்து திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.பாமினி தெரிவிக்கையில்,



'பெண்களுக்கான சம உரிமை சில வேளைகளில் மறுக்கப்படுகிறது கூலித் தொழிலின் போது சம்பளத்தில் பாகுபாடு காட்டப்படுவதுடன் ஒரே வேலையை ஆண் பெண் என செய்தாலும் இங்கு உரிமை மறுக்கப்படுகிறது இது போன்று மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு தொழில் நிமித்தம் உடல் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர் இதனால் இதற்கு சலுகைகளை வழங்குவதன் மூலமாக பாதுகாப்பை பெறமுடியும் தற்போது அரசியலில் பெண்களுக்கு50வீதமான பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டாலும் அடிமட்டத்தில் உள்ள பெண்களை ஈடுபடுத்துவது பெரும் சவாலாக உள்ளது.

உரிமைகள் கல்வி சமத்துவம் தன்னம்பிக்கையுடன் கூடிய பால் நிலை சமத்துவத்தையும் இதன் மூலமாக பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் ஒரு தாய் கர்ப்பமாக இருக்கும் போதே ஆரம்பத்தில் இருந்து இதனை உருவாக்க வேண்டும். பாலின கல்வியை ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழக கல்வி வரை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. குழந்தைகளை சரியாக வளர்ப்பதன் ஊடாக எதிர்காலத்தில் வன்முறையற்ற சமூ கத்தை உருவாக்கலாம். இவ்வாறாக நாட்டில் பெண்களுக்கான உரிமைகள், சமத்துவம் , சுதந்திரம் பற்றி பேசப்பட்டாலும் மகளிர் தின கொண்டாட்டங்களை வெறும் விழாவாக கொண்டாடினாலும் பல தரப்பட்ட உரிமைகளும் சுதந்திரங்களும் மறுக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலை பற்றி தம்பலகாமம் பகுதியை சேர்ந்த பெண் சமூக சிவில் செயற்பாட்டாளரான வல்லியம்மா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தெரிவிக்கையில், இலங்கையில் பெண்களுக்கான சுதந்திரம் இருக்கு என்று சொல்ல முடியாது. மகளிர் தினத்தை ஏன் கொண்டாட வேண்டும் என்ற கேள்வியும் சில வேளை எழுகின்றது. குறித்த தினத்தை கொண்டாடுவதற்காக மாத்திரம் கொண்டாடி எவ்வித பலனும் இல்லை. இது நடைமுறையில் இல்லாத ஒன்றாக காணப்படுகிறது. நூற்றுக்கு ஐம்பது வீதம் இருந்தாலும் சுதந்திரத்தை முழுமையாக காணமுடியாது. எதிர்காலத்தில் தற்போதுள்ள சுதந்திரமும் இருக்குமோ என்ற சந்தேகம் தான் எங்களிடம் உள்ளது என்றார்.

இலங்கையை பொறுத்தமட்டில் பெண்கள் பல அரச சார்பற்ற அரச துறைகளில் உயர் பதவிகளில் குறைவாக காணப்படுகின்றார்கள் அரசியலமைப்பில் சொல்லப்பட்ட உரிமைகள் சுதந்திரங்கள் மறுக்கப்படுகின்றன கடந்த காலங்களில் உள்ளூராட்சி தேர்தலின் போது 25வீதமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என ரணில் மைத்திரி அரசாங்கத்தின் நல்லாட்சி காலத்தில் சொல்லப்பட்டாலும் கூட சில உள்ளூராட்சி சபைகளில் கட்சிகளால் அது நடைமுறையில் சாத்தியமாக்கப்படவில்லை என்பதை கண்டு கொள்ளலாம்.



இது குறித்து திருகோணமலை நகரை சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான திருமதி கோகிலவதனி கண்ணன் தெரிவிக்கையில், ''பெண்களுக்கான சுதந்திரம் இல்லை என்றே கூறலாம் ஏன்எனில் இன்றைய கால கட்டத்தில் வீட்டில் இருந்தே அது ஆரம்பிக்கிறது ஊடகத் துறையினை பார்த்தால் ஊடகனாக வெளியில் சென்றால் வித்தியாசமாக பார்க்கிறார்கள் இது போன்று வீட்டில் அம்மா அப்பா பிள்ளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியுள்ளது மோட்டார் சைக்கிளில் வெளியே சென்றால் கூட வித்தியாசமாக பார்க்கிறார்கள் பெண்கள் எவ்வளவோ சாதிக்க வேண்டியவர்கள் இத்தகைய நவீன காலத்தில் எங்களது சுதந்திரம் பறிக்கப்படுகின்றதே தவிர உரிமைகள் அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளது சமூக வலைத்தளங்களில் கூட பாவனையின் போது தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் இது போன்று விரும்பிய ஆடை அணியும் சுதந்திரம், பயணங்களின் போதான பாதுகாப்பற்ற நிலை தான்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# இலங்கைத் தீவின் மீதான கடல்வழி அந்நிய படையெடுப்புகள்

**பகுதி 3இன் தொடர்ச்சி பாகம் 9**

மு.திருநாவுக்கரசு



இலங்கைக்கு வடக்கே இருந்து, பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியாவில் இருந்து தொடர்ந்து நிகழ்ந்து வந்த படையெடுப்புகளைப் போலவே, இந்துமாகடல் தழுவிய வகையில் கி.பி 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீனா கடல்சார் பேரரசாக எழுச்சி பெற்றபோது கி.பி 1412 ஆண்டு சீனக் கடற்படைத் தளபதி ஷெங்ங் ஹே (Admiral Zheng He) தலைமையில் கொழும்பு இராச்சியம் படையெடுப்புக்கு உள்ளாகி மூன்று ஆண்டுகள் அவரது இராணுவப் பிடியின் கீழ் சின்னாபின்னமாகியது. இதுதான் வரலாற்றில் முதல் முறையாக தெற்காசியக் கடல் வழியே இலங்கைக்கு வந்த முதலாவது படையெடுப் பாகும்.



இதைத் தொடர்ந்து கி.பி 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய பேரரசுகள் உலகளாவிய கடலாதிக்கத்தைப் பெறத் தொடங்கிய பின்னணியில் 1505 ஆண்டு போத்துக்கீஸரும், 1602 ஆம் ஆண்டு டச்சுக்காரரும் (கைப்பற்றியது 1658) 1796 ஆம் ஆண்டு பிரித்தானியரும் கடல் வழியே இலங்கையில் கால் பதித்தனர்.

1796 ஆம் ஆண்டு பிரித்தானியர் கடல் வழியே இலங்கையில் கால் பதித்தபோது பிரான்சுச் சக்கரவர்த்தியான நெப்போலியன் கூறிய பின்வரும் கூற்று மிகவும் கவனத்திற்குரியது.

“திருகோணமலையை யார் தன் கையில் வைத்திருக்கிறாரோ அவர் இந்துமாகடலை ஆள்வார்” (“He who controls Trincomalee controls the Indian Ocean’ - Napoleon in 1796).

மேலும், கடல்சார் ஆதிக்கம் பற்றி அமெரிக்கக் கடற்படைத் தளபதியான அல்பிரெட் டயர் மாகன் (Admiral Alfred Thayer Mahan) கூறிய இரண்டு கூற்றுக்கள் முக்கியமானவை.

‘இந்து சமுத்திரத்தை யார் கட்டுப்படுத்துகிறாரோஅவர்ஆசியாமீது ஆதிக்கம் செலுத்துவார்” (“Whoever controls the Indian Ocean will dominate Asia’ - 1897).

**‘கடலை ஆள்பவன் உலகை ஆள்வான்”**
**(“Whoever controls the seas, rules the world’).**

முதலில் இலங்கைக்கு வடக்கே இருந்து சிறு பாக்குநீரிணையைத் தாண்டி இந்தியாவில் இருந்து 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இலங்கைக்கு ஏற்பட்ட சவால்களுக்கு அப்பால் 15 ஆம் நூற்றாண்டில் இருந்து கடல் சார்ந்த பேரரசுகளான சீனா, போத்துக்கல், டச்சு, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற அரசுகளால் கடல் சார் தென்புறத்திலிருந்து இலங்கைக்குச் சவால்கள் உருவாகின. இத்தகைய சவால்கள் அனைத்தும் இலங்கையின் அமைவிடம் சார்ந்தவை.

இலங்கைத் தீவுக்கு வடக்கிலிருந்து பாக்கு நீரிணைக்கூடாக இந்திய ஆதிக்கமும், தெற்கே கண்டங்களையும் பெரும் கடல்களையும் கடந்த உலகப் பெரு வல்லரசுகளின் இந்து மாகடல் ஆதிக்கமும் கூடவே இதன்வழி உலகம் தழுவிய அரசியல் ஆதிக்கமும் இணைந்த பெரும் அரச ஆதிக்க வலைக்குள் இலங்கைத் தீவும் அதன் இனப்பிரச்சினையும் சிக்குண்டுள்ளன. இந்தவகையில், ஈழத் தமிழருக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது சிங்கள பௌத்த அரசுடனும் அதனுடன் தொடர்புள்ள பல்வேறு அரசுகளினது ஆதிக்கங்களுடனும் இணைந்த வகையில் படச்சட்டத்துக்குள் (Frame) கூட்டிக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில், இலங்கையின் இனப்பிரச்சினையும் ஈழத் தமிழருக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையும் இலங்கைத் தீவின் எல்லைக்கு உட்பட்ட ஒன்றாக மட்டுமன்றி அது அண்டை நாடு, சீனா, மேற்குலக வல்லரசுகள், இந்நாடுகள் அனைத்தும் சார்ந்த கூட்டாளி நாடுகள் ஆகியவற்றின் நலன்கள் தழுவிய கூரிய கத்தி மாலையாய் ஈழத் தமிழரின் கழுத்தில் இறுக மாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பலம் பொருந்திய பல் பரிமாணக் கத்தி மாலையாய் ஈழத் தமிழரின் கழுத்தில் மாட்டப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை மனம் போன போக்கில் எழுமாத்திரமாய்க் கையாளாது தெளிந்த அறிவுடனும் அதிக நிதானத்துடனும் கையாள வேண்டும்.

தெற்கே அம்பாந்தோட்டையிலும் தென் மேற்கே கொழும்பிலும் நூற்றாண்டு தழுவிய துறைமுக ஒப்பந்தங்களுக்கு ஊடாகச் சீனா இலங்கையில் கால் பதித்துள்ளது. இது இலங்கைக்குத் தெற்கே Diego Garcia அமெரிக்கா வின் மிகப்பெரும் இராணுவத் தளத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாய் அமைவதுடன், அது அமெரிக்காவின் இந்துமாகடல் ஆதிக்கத்துக்கும் சவாலாயும் அமைந்துவிடும். கூடவே இலங்கையில் சீனாவின் பிரசன்னமானது இந்தியாவின் பாதுகாப்புக்கும் இருப்பிற்கும் பெரும் சவாலாய் அமைந்துவிடும்.



இந்நிலையில், இந்திய - சீன - அமெரிக்க முக்கோண மையத்துக்குள் இலங்கையும் ஈழத் தமிழர் பிரச்சினையும் ஜீவ மரண போராட்டத்திற்குள் சிக்குண்டுவிடும். இதில் முதல் பலியாகக்கூடியது அரசற்ற அப்பாவி ஈழத் தமிழர்தான். இதனைத் தொடராது தொடர் நவீன வரலாற்று வளர்ச்சிக்கூடாகத் தொடர்ந்து நோக்க வேண்டியது அவசியம்.

தொடரும்...

**இந்தியாவில் ... தொடர்ச்சி ...**

வில் இடம்பெற்ற 58 ஆவது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தில் பேசும் போது வோக்கர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரேச் தெரிவித்துள்ளார்.

ஜம்மு கஸ்மீர் பிரதேசங்கள் இந்திய பாகிஸ்தான் எல்லையில் உள்ள 1947 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து அங்கு மோதல்கள் நடந்தவண்ணமே உள்ளன. அதேசமயம் இந்தியாவின் வடகிழக்கு பிரதேசத்தில் மயிhன்மரின் எல்லையில் உள்ள மனிபூரில் 2023 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக இதுவரையில் 200 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், பல ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆனால் ரேக்கின் கருத்துக்கு தனது கடுமையான எதிர்ப்பை இந்தியா வெளியிட்டுள்ளது. ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தவறான தகவல்களை பரப்புகின்றார். அதற்கான எந்த ஆதாரமும் இல்லை என ஐ.நாவுக்கான இந்திய பிரதிநிதி அரின்டம் பக்சி தெரிவித்துள்ளார்.

**உக்ரைனுக்கான ... தொடர்ச்சி ...**

செலன்ஸ்கி, கனிமவள உடன் பாட்டிலும் கையொப்பமிட மறுத்தபோது ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து வெள்ளை மாளி கையில் இருந்து அவரும் அவரின் அணியினரும் வெளியேற்றப்பட்ட னர். வெளியேற்றப்பட்ட உக்ரைன் அதிபருக்கு ஐரோப்பிய ஒன்றியமும், பிரித்தானியாவும் அடைக்கலம் கொடுத்த போதும் அமெரிக்கா தனது அழுத்தத்தை இறுக்கி வருகின்றது.

ட்றம்பின் உத்தரவைத் தொடர்ந்து போலந்து எல்லைகளில் இருந்து ஆயுதங்கள் வினியோக பணி நிறுத்தப்பட்டுள்ளதை போலந்தின் பிரதமர் Donald Tusk உறுதிப்படுத்தியுள்ளார். Jasionka வான்படைத் தளத்தின் ஆயுதக் களஞ்சியத்திற்கு அமெரிக்கா நேரிடையாகவே உத்தரவுகளை வழங்கியுள்ளது., ரஸ்யா மீதான பொருளாதாரத் தடையையும் அமெரிக்கா நீக்கலாம், நிலமை மிகவும் தீவிரமானதாக மாறி வருகின்றது. ஆயுத வினியோகம் நிறுத்தப்படுவது தொடர்பில் நேட்டோவுக்கு கூட தெரியப்படுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா புனாய்வுத் தகவல் களை நிறுத்தியதை உக்ரைன் தரப்பு உறுதிப்படுத்தியுள்ளதுடன், அமெரிக்காவின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து தாம் பேச்சுக்கு தயார் எனவும், தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றிற்கு உடன்படுவதாகவும் கடந்த செவ்வாய்க் கிழமை(4) உக்ரைன் அரச தலைவர் வொலமிடீர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# எதிர்பார்ப்பு சாத்தியமாக வேண்டும்

துரைசாமி நடராஜா

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடந்த மாதத்தில் 2025 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இவ்வரவு செலவு திட்டம் அனைத்து தரப்பினர்களின் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன. இதனிடையே மலையக மக்களின் நலன் சார்ந்த பல விடயங்கள் குறித்தும் வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலையக தமிழ் இளைஞர்களின் தொழிற்பயிற்சி, வாழ்வாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் எனப் பலவும் இதில் உள்ளடங்கும்.



இந்நிலையில் வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் முன்வைத்துள்ள மலையக மக்களின் நலன் சார்ந்த வாக்குறுதிகள் உள்ளிட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற உரிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகுமென்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர். அத்தோடு கடந்தகால வரவு செலவு திட்டங்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் புஷ்வாணமாகியதைப் போன்று இம்முறையும் நிலைமைகள் அமைந்துவிடக்கூடாதென்றும் இவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வரவு செலவு திட்டம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. வரவு செலவு திட்ட அறிக்கையை தயாரிக்கும் பொறுப்பு அரச தலைமையினுடையதாகும். இப்பணியின் தொடர்பாடல்கள் நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது. இதன்போது நிதி அமைச்சு அமைச்சர்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றிடமிருந்து தனித்தனியாக விபரங்களை பெற்றுக் கொண்டு அரசாங்கத்தின் முதன்மை வருமானத்துடன் உத்தேச செலவினம் ஒப்பு நோக்கப்படும். அதேபோன்று நிதியமைச்சு நேரடியாகவும், வர்த்தக சபைகள் மற்றும் சுகாதாரம், கல்வி போன்ற பல பிரிவுகளிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும். வரவு செலவு திட்ட அறிக்கையினை தயாரிப்பதற்கு சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் செல்லலாம். அதன்பின் நிதித்துறை நிபுணர்கள், கொள்கை தயாரிப்பாளர்கள் போன்ற பல்துறை நிபுணர்களின் பங்கேற்புடன் வரவு செலவு அறிக்கை பற்றிய தொழில்நுட்ப திட்டமொன்று முன்வைக்கப்படும்.

### தேசிய மாநாட்டின் தேவை

சில நாடுகளில் பொதுமக்கள் புரிந்து கொள்ளக் கூடிய எளிய முறையில் வரவு செலவு திட்டம் முன்வைக்கப்படுகின்றது. இதனை 'குடிமக்கள் வரவு செலவு '*(Citizens Budget)* என்று அழைக்கின்றனர். இதேவேளை இந்திய அரசு வரவு செலவு திட்டத்தினை தயாரிக்கும் போது அதற்குள் பொது மக்களின் முக்கிய தேவைகளை இனங்கண்டு, தேசிய வரவு செலவு திட்ட தயாரிப்பிற்கு முன்னதாக



முதன்மை தேவைகளை பட்டியலிடுவதற்கான தேசிய மாநாட்டை நடாத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. 2011 ம் ஆண்டிலிருந்து தேசிய மாநாட்டிற்கு முன்னதாக பிராந்திய மாநாடுகள் நடாத்தப்படுகின்றன. இதேவேளை வரவு செலவு திட்ட செயற்பாட்டின்போது பொதுமக்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் ஈடுபாடு கொண்டவர்கள் என்ற வகையில் எம் அனைவருக்கும் ஒரு கடமைப்பாடு உள்ளதாக செய்திகள் வலியுறுத்துகின்றன. நாட்டின் அபிவிருத்தியினை ஏற்படுத்தத்தக்க வகையில் உரிய நேரத்தில் நாம் பெற்றுக் கொள்ளும் சேவைகளுக்கான வரிகளை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுப்பதும், அவ்வாறு எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் பணம் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா? என்பது குறித்து விழிப்புடன் இருப்பதும், உரிய பணி முன்னெடுக்கப்படாத நிலையில் அவ்விடயத்துடன் தொடர்புடைய நிறுவனத்திடம் புகார் செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அப்பொறுப்பின் முக்கிய பணியாகும் என்றும் செய்திகள் மேலும் வலியுறுத்துகின்றன.



இந்த வகையில் இலங்கையின் வரவு செலவு திட்ட செயற்பாடுகளில் அதன் வெளிப்படைத் தன்மை தளர்ந்துள்ளதாக ஏற்கனவே சர்வதேச ஆராய்ச்சி அறிக்கைகள் பலவும் வலியுறுத்தி இருந்தமையும் நீங்கள் அறிந்ததேயாகும். இவ்வாறாக வரவு செலவு திட்டம் தொடர்பில் வெளிப்படைத் தன்மையற்ற நிலையினை பெற்றிருந்த ஏனைய நாடுகளாக எகிப்து, மெசிடோனியா, நைஜீரியா, ரொமேனியா ஆகிய நாடுகள் ஏற்கனவே பெயரிடப்பட்டிருந்தன.

இவ்வாறாக வரவு செலவு திட்டம் என்பது எல்லா குடிமக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட விடயமாக இருந்துவரும் நிலையில் இலங்கையில் புதிதாக ஆட்சிபீட மேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது முதலாவது வரவு செலவு திட்டத்தை கடந்த திங்கட்கிழமை (17) பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் 2025 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். நாட்டு மக்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இவ்வரவு செலவு திட்டம் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளும் சிறந்த முறையில் நிறைவேற்றப்படும் என்றும் அதற்கான பல திட்டங்களை வரவு செலவு திட்டத்தில் முன்வைத்துள்ளதாகவும் அரச தரப்பு செய்திகள் வலியுறுத்தி இருந்தன. மேலும் மக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் வகையில்தான் 2025 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பிற நாடுகளினதும், வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது ஒரு சில நிறுவனங்களின் தேவைகளுக்காகவே வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எந்த தரப்பினரையும் வரவு செலவு திட்டத்தில் புறக்கணிக்கவில்லை என்றும் அரச தரப்பு செய்திகள் மேலும் வலியுறுத்துகின்றன.

### செயலிழந்த லயன்கள்

ஆட்சிபீடமேறும் அரசாங்கங்கள் வழமைபோல மலையக மக்களின் அபிவிருத்தி கருதி வாக்குறுதிகள் பலவற்றையும் வரவு செலவு திட்டத்தில் வழங்கி வருகின்றன. இதனடிப்படையில் கடந்தகால நிலைமைகளை நோக்குமிடத்து, தோட்டப்புற வீடமைப்பு தொடர்பான வாக்குறுதிகளையே அதிகமாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கேற்ப 2017 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் பெருந்தோட்டத் துறையிலுள்ள வீட்டுத் தேவைகள் உக்கிரமடைந்த நிலையில் காணப்படுவதோடு, இன்னும் சிலர் செயலிழந்த லயன்களில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே அரசாங்கம் பெருந்தோட்டத்துறைக்கு 25,000 வீடுகளை நிர்மாணிக்கவுள்ளது. அதற்கான காணியும், வசதிகளும் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படவுள்ளது என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. 2018 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் மலையக மக்களுக்கு 25,000 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று முன்மொழியப்பட்டது. பெருந்தோட்டத் துறையானது ஏற்றுமதி வருமானத்திற்கு தொடர்ச்சியாக பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அவர்களது வாழ்க்கைத்தரம் இன்றும் நியம நிலைக்கு கீழாகவுள்ளது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

பகுதி 1



# மத்திய கிழக்கு நாடுகளில் அதிக கவனம் செலுத்தும் ரஷ்யா

## ரஷ்ய ஊடகவியலாளருடனான செவ்வி

**World Geostrategic Insights என்ற ஆய்வு அமைப்பு, ரஷ்யாவைச் சேர்ந்த ரற்ஸியானா போக்றொவ்ஸ்காயா (Tatiana Pokrovskaia) என்னும் ரஷ்ய ஊடகவியலாளருடன் ஒரு செவ்வியை மேற்கொண்டிருக்கிறது. ரஷ்ய வெளியுறவுக் கொள்கையில் மத்திய கிழக்கின் முக்கியத்துவம், மொஸ்கோவுடன் உறவைப் பேண மத்திய கிழக்கு நாடுகள் காட்டும் ஆர்வம், ரஷ்யாவின் பூகோளச் செயற்பாடுகள், மத்திய கிழக்கில் ரஷ்யாவின் முதலீடுகள் போன்றவற்றை இந்தச் செவ்வி ஆய்வுசெய்கிறது.**

**ரற்ஸியானா போக்றொவ்ஸ்காயா, ரஷ்யாவின் பீற்றர்ஸ்பேர்க் நகரில் வதியும் ஒரு பன்னாட்டு வர்த்தக அபிவிருத்தி நிபுணர். ஆபிரிக்கா, பொதுநலவாய நாடுகள், ஆசியா, மத்திய கிழக்குப் போன்ற பிரதேசங்களில் 20 வருடங்களாகப் பணியாற்றிவருகிறார். ரஷ்ய நிறுவனங்களைப் பன்னாட்டுச் சந்தையில் அறிமுகப்படுத்துபவதில் கைதேர்ந்தவர்.**

தமிழில்: ஜெயந்திரன்

**ரஷ்யாவின் அரசியலிலும், பொருண்மியத்திலும் மத்திய கிழக்கு அண்மைக்காலமாக அதிகமான பங்கை வகிக்கத் தொடங்கியிருக்கிறது. மத்திய கிழக்குப் பிரதேசத்தில், மொஸ்கோவைப் பொறுத்தவரையில், அரசியல் ரீதியிலான (ரஷ்யாவுக்கு எதிரான கூட்டணி கள் உருவாகு வதைத் தடைசெய்தல்), பாதுகாப்பு ரீதியி லான (பயங்கரவாதி களிடமிருந்து வருகின்ற அச்சுறுத்தல்களைக் குறைத்தல்) மற்றும் பொருண்மிய ரீதியிலான எதிர் பார்ப்புகளைக் கொண்டிருக்கிறது. மேற்குலக நாடுகளுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தோன்றியுள்ள இழுபறிகள் காரணமாக, மத்திய கிழக்குப் பிரதேசத்தில் தனது இராஜீக முயற்சிகளில் அதிகமாகக் குவிமையப் படுத்தவும், பொருண்மியக் கூட்டுறவை வலுப்படுத்தவும், இராணுவம் மற்றும் தொழிற்றுறை சார்ந்த கூட்டுறவை மேலும் அதிகரிக்கவும் ரஷ்யாவைத் தூண்டி யிருக்கிறது. இக்குறிப்பிட்ட பிரதேசத்தில், தரையில், ரஷ்யாவின் இராணுவப் பிரசன்னம் குறைந்திருக்கும் அதே நேரம், இராணுவக் கூட்டுறவும், இராஜீக மற்றும் பொருண்மிய உறவுகள் அதிகரிக்கப் பட்டிருக்கின்றன. பொதுப்படையாகப் பார்க்கும் போது, ரஷ்யாவுக்கும் மத்திய கிழக்கும் இடையே அண்மைக் காலத்தில் அதிகரித்திருக்கும் உறவை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை என்ற சதுரங்கப் பலகையைப் பொறுத்த வரையில் மத்திய கிழக்கு அதற்கு எந் தளவுக்கு முக்கியமானது?**

பூகோள ரீதியிலான பொருண்மியத்தை அவதானிக்கும் போது, அந்தச் செயற்பாட்டில் மத்திய கிழக்கு ஆற்றும் பங்கை மேலும் வலுப்படுத்தும் ஒரு போக்கை தற்போது அவதானிக்க முடிகிறது. இதற்கு முக்கியமான காரணம் மத்திய கிழக்கின் புவியியல் அமைவிடமாகும். ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கக்கூடிய அமை விடத்தில் மத்திய கிழக்கு அமைந்திருப்பது கவனிக்கத் தக்கதாகும்.




இனங்களையும் பல சமயங்களையும் தன்ன கத்தே கொண்டிருக்கும் ரஷ்யா, அனைத்துப் பண்பாடுகளையும்சமயங்களையும்சேர்ந்த பிரதிநிதிகளுடன் சுமூகமான உறவைப் பேணிவருகிறது. ரஷ்யக் கூட்டாட்சி அரசின், அரசியல் சாசனத்தில் இந்த உறவு முக்கியமாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உறவு என்று வரும் பொழுது அரசியல் மற்றும் பொருண்மிய ரீதியில் மட்டுமல்லாது ஆன்மீக ரீதியிலும் அந்த உறவு விரிந்துசெல்கிறது.

மத்திய கிழக்கு நாடுகளைப் பொறுத்த வரையில், அதுவும் குறிப்பாக பேர்சிய வளைகுடாவில் உள்ள முடியாட்சி நாடுகளைப் பொறுத்தவரையில், தமது பொருண்மியத்தில் வெளிநாட்டு முதலீடுகளை எப்படிக் கவர்ந்திழுப்பது என்ற விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. அமீரக நாடுகளைப் பொறுத்த வரையில் பொருண்மியம் தொடர்பான சட்டவாக்கங்களில், தாராளவாதம் பயன்படுத்தப்படுவதால், அந்நாடுகளில் ரஷ்ய முதலீடுகளைப் பயன்படுத்துவது சாத்தியமாகியிருக்கிறது. இவ்வாறு தொழிற்றுறை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உள்நாட்டு நிறுவனங்களை தாபிக்கும் வாய்ப்பும் அங்கு உருவாகியிருக்கிறது.

ரஷ்யக் கூட்டாட்சி அரசைப் பொறுத்த மட்டில், அதன் தொழிற்றுறை சார்ந்த மூலப் பொருட்களைச் சேமித்து வைக்கவும் அவற்றை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்லவும், மத்திய கிழக்கு மிகச் சிறப்பான வாய்ப்பை வழங்குகிறது. ஈரானை ஊடறுத்துச் செல்லும் வடக்குத் தெற்கு பன்னாட்டுப் போக்குவரத்துப்பாதை (North - South International Transport Corridor) இவ்வாறான மூலப் பொருட்களைக் கொண்டுசெல்லும் செயற்பாட்டுக்கு, எதிர்காலத்தில் மிகவும் முக்கிய பங்கை வகிக்க இருக்கிறது. ஈரானின் றாஷ்ற் (Rasht) நகரிலிருந்து அஸர்பைஜானின் அஸ்ற்றாறா (Astara) நகருக்குச் செல்லும் தொடருந்துப் பாதையை நிர்மாணிப்பதும் கடல்வழிப்பாதைக்குத் தேவையான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுவதும் இத்திட்டத்தின் முக்கிய விடயங்களாகும். (2023ம் ஆண்டு, ஜூன் மாதம் 17ம் திகதி மேற்குறிப்பிட்ட ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட நாடுகளிடையே ஒப்பமிடப்பட்டது) இதே வேளை, ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜெபெல் அலி நகரத்திலிருந்து கட்டாரின் டோஹா ஊடாக, நோவோறொசியிஸ்க் Novorossiysk) நகருக்குச் செல்லும் கடல்வழிப்பாதை ஏற்கனவே பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு வர்த்தகம் மற்றும் பொருண்மிய உறவுகளை விரிவாக்குவதற்கு, இன்னும் குறிப்பாக ரஷ்யா மீது மேற்குலகம் பொருண்மிய ரீதியாக பல தடைகளை விதித்திருக்கும் இத்தருணத்தில், ரஷ்ய கூட்டாட்சி அரசுக்கு மத்திய கிழக்கு ஒரு முக்கிய சாளரமாக இன்று திகழ்கிறது. ஆகவே தான், மத்திய கிழக்கில், ரஷ்யா முக்கியமான முதலீடுகளை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# நேட்டோவின் நாட்கள் எண்ணப்படுகின்றனவா?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

உக்ரைன்- அமெரிக்க மோதல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. வெள்ளை மாளிகையின் ஒவல் அலுவலகத்தில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை(28) இடம்பெற்ற மோதல்களைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேற்றப்பட்ட உக்ரைன் அதிபருக்கு ஐரோப்பிய ஒன்றியமும், பிரித்தானியாவும் அடைக்கலம் கொடுத்த போதும் அமெரிக்கா தனது அழுத்தத்தை இறுக்கி வருகின்றது.

அமெரிக்காவை புறக்கணித்த செலன்ஸ்கிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை(2) ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் லண்டனில் விழா எடுத்து கொண்டாடியது ட்றம்பை கடும் சினத்திற்குள் தள்ளியுள்ளது. இந்த கொண்டாட்டத்திற்கு மறுநாள் உக்ரைனுக்குகான ஆயுத விநியோகம் மற்றும் படைத்துறை நிதி உதவிகள் அனைத்தையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளது.



விநியோகம் செய்வதற்காக கப்பல்கள் மற்றும் விமானங்களில் ஏற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் போலந்தில் உள்ள களஞ்சியங்களில் உள்ள ஆயுதங்கள் அனைத்தையும் நிறுத்துமாறும் ஆயுதங்களுடன் பயணிக்கும் கப்பல்களை திரும்ப அழைக்குமாறும் ட்றம்ப் பாதுகாப்புத்தலைமையகமான பென்ரகனுக்கு உத்தரவிட்டுள்ளார்.

உக்ரைன் அரசு அமைதி வழிக்கு திரும்பும் வரை இந்த நடவடிக்கை அமுலில் இருக்கும் எனவும் நட்பு நாடுகளும் அதனை பின்பற்ற வேண்டும் எனவும் ட்றம்ப் தெரிவித்துள்ளார் என த புளூம்பேர்க் ஊடகம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த உத்தரவு தற்போது கொள்முதல் செய்யப்பட்ட 1 பில்லியன் ஆயுத விநியோகத்தை உடனடியாக பாதிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனுக்கும் - ரஸ்யாவுக்கும் இடையிலான அமைதி முயற்சிகளை செலன்ஸ்கி குழப்பி வருவதாக ட்றம்ப் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றார். போர் நிறுத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்றால் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்படவேண்டும் என செலன்ஸ்கி தெரிவித்துவரும் கருத்தையும் மறுத்துள்ள ட்றம்ப், நேட்டோவில் உறுப்புரிமை கொடுப்பதற்கும் மறுத்துள்ளார். அமைதி முயற்சிகளில் அமெரிக்க படையினர் ஈடுபடுவதையும் ட்றம்ப் விரும்பவில்லை.

உக்ரைனுக்கு அமெரிக்கா *M1 Abrams tanks, Bradley armored vehicles, M777 howitzers, HIMARS multiple rocket launchers, and artillery rounds* ஆகிய ஆயுதங்கள் உட்பட பெருமளவான சிறிய ரக ஆயுதங்களை வழங்கி வருகின்றது. இதுவரையில் வழங்கப்பட்ட ஆயுதங்களின் பெறுமதி 66 பில்லியன் டொலர்கள். இது ரஸ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளின் ஒரு வருட பாதுகாப்புச் செலவை விட அதிகமாகும்.



ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் எகிப்த்து மற்றும் இஸ்ரேல் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான படைத்துறை உதவிகளை நிறுத்தியிருந்தார்.

கடந்த திங்கட்கிழமை(3) அமெரிக்கதுணை அதிபர் ஜே.டி. வான்ஸ், வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோ, பாதுகாப்புச் செயலாளர் பீற் ஹெசத், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வற்ஸ் உட்பட உயர் படை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே டிறம் இந்த உத்தரவை வெளியிட்டதாக *Axios* என்ற ஊடகம் தெரிவித்துள்ளது. அது மட்டுமல்லாது புலனாய்வுத் தகவல்களை பரிமாறுதல், உக்ரைன் படையினருக்கான பயிற்சிகள் மற்றும் விமானிகளின் உதவிகள் போன்றவற்றையும் நிறுத்துவது தொடர்பில் ஆராயப்படுவதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு, அமெரிக்காவின் திறைசேரிக்கும் ஒரு எல்லையுண்டு, எமது ஆயுதக்களஞ்சியமும் ஒரு எல்'லைவரை தான் வழங்கமுடியும், தற்போது நேரம் உக்ரைனுக்கு சாதகமானதாக இல்லை என பொக்ஸ் ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோச கர் மைக் வற்ஸ். அமைதி முயற்சிக்கு ஒத்துழைக்காது விட்டால் நிதி நிறுத்தப்படும் என தாம் பல தடவை செலன்ஸ்கிக்கு தெரிவித்ததாக அமெரிக்காவின் வர்த்தகத்துறை செயலாளர் *Howard Lutnick* தெரிவித்துள்ளார்.

ட்றம்ப்பின் உத்தரவைத் தொடர்ந்து போலந்து எல்லைகளில் இருந்து ஆயுதங்கள் விநியோக பணி நிறுத்தப்பட்டுள்ளதை போலந்தின் பிரதமர் *Donald Tusk* உறுதிப்படுத்தியுள்ளார். *Jasionka* வான்படைத்தளத்தின் ஆயுதக் களஞ்சியத்திற்கு அமெரிக்கா நேரிடையாகவே உத்தரவுகளை வழங்கியுள்ளது., ரஸ்யா மீதான பொருளாதாரத் தடையையும் அமெரிக்கா நீக்கலாம், நிலமை மிகவும் தீவிரமானதாக மாறி வருகின்றது. ஆயுத வினியோகம் நிறுத்தப்படுவது தொடர்பில் நேட்டோவுக்கு கூட தெரியப்படுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து உக்ரைன் வீழச்சியடையலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ள நிலையில் உக்ரைனை காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஐரோப்பிய ஒன்றியமும் பிரித்தானியாவும் இறங்கியுள்ளன. பிரித்தானியாபிரதமர்திங்கட்கிழமைக்கு(3) பின்னர் 3 தடவைகள் ட்றம்ப்புடன் தொலைபேசியில் கதைத்தபோதும் என்ன பேசினார் என்பதை அவர் கூறவில்லை.

இந்த நிலையில் நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியம் அவசரமாக கூடவுள்ளது. உக்ரைனின் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்தலாம் என்பதை ஐரோப்பிய ஒன்றியம் கலந்துரையாடவுள்ளதாக பொலிற்றிக்கோ ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நிதி நிறுத்தத்தை ஈடுசெய்வதற்காக உக்ரைனுக்கு கடனாக வழங்குவதற்கு அவசரமாக 150 பில்லியன் ஈரோக்களை திரட்டுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியம் தனது பாதுகாப்பு செலவினத்தை 800 பில்லியன் ஈரோக்களாக உயர்த்தவும் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் வொன் டெர் லெயன் தெரிவித்துள்ளார். ஆயுத வினியோகத்தையும் அதிகரிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அதேசமயம் ஜேர்மனி தனது பாதுகாப்பு செலவினத்தை 400 பில்லியன் ஈரோக்களாக உணர்த்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ரெய்ட்டர் தெரிவித்துள்ளது.



ஐரோப்பாவின் பாதுகாப்பு செலவினம் கடந்த வருடம் 12 விகிதமாக அதிகரித்தபோதும் அது அமெரிக்காவின் 760 பில்லியன் டொலர்கள் பாதுகாப்புச் செலவுடன் ஒப்பிடும்போதும் அரைபங்காகும். வொன் டெர் லெயன் கூறுவது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**எதிர்பார்ப்பு ... தொடர்ச்சி ...**

பெருந்தோட்ட மக்களை லயன் அறைகளில் இருந்து வீடுகளுக்கு மாற்றும் முயற்சிக்கு நாம் ஆதரவளிக்கவுள்ளோம். நடுத்தர காலப்பகுதியில் 25,000 வீடுகள் இதற்காக வழங்கப்படவுள்ளன என்று முன்மொழிவு வலியுறுத்தியது.

இதேவேளை 2022 ம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்திலும் தோட்டத்துறை வீடமைப்பு முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. தோட்ட மக்களின் வீட்டு நிலைமைகள் மிகவும் மோசமாக காணப்படுகின்றன. குறித்த ஊழியர்கள் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான தேயிலைக்கான அடிப்படையினை வழங்குகின்றனர். எனவே அந்த சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஒவ்வொரு வரினதும் பொறுப்பாகும். எனவே தோட்டத் துறையில் வீடமைப்பு அபிவிருத்திக்காக அடுத்த மூன்று வருடத்திற்குள் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்று முன்மொழிவு வலியுறுத்தியது.

### கானல் நீரான எதிர்பார்ப்பு

இந்நிலையில் 2024 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில், பெருந்தோட்டப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் வீட்டுரிமை பெறாதவர்களாவர். எனவே அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு காணி உரித்தினை வழங்குவதற்கு தாம் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், இதன் ஆரம்ப கட்டமாக 4 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார். எனினும் வரவு செலவு திட்டத்தின் ஊடாக கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டதே தவிர செயல்வடிவம் என்பது சாத்தியப்படாத ஒன்றாகவே காணப்பட்டது. மக்களின் எதிர்பார்ப்புகள் கானல் நீரானதையே அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதனிடையே புதிதாக அமோக வெற்றி பெற்று ஆட்சிபீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு செலவு திட்டம் கடந்த 17 ம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட நிலையில் நாட்டுக்கும் மக்களுக்கும் நலன் சேர்க்கும் பல்வேறு முன்மொழிகள் இதில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் மலையக மக்களின் நலன் சார்ந்த உள்ளீர்ப்புகளும் இதிலடங்கும். இந்நிலையில் மலையகத்தில் தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 4,268 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இளைஞர்களின் தொழிற்பயிற்சி, வாழ்வாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2,650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறப்பம்சமாகும் என்பதோடு இளைஞர்களை முன்னிறுத்தி அவர்களின் நலன்களைப் பேணும் நடவடிக்கைகள் காலத்தின் தேவையாகவுள்ளது.

### கற்றறிந்த பாடங்கள்

அத்தோடு பெருந்தோட்ட மக்கள் உழைப்புக்கேற்ற ஊதியமின்றி காலாகாலமாக அல்லலுற்று வருகின்றனர். இதனால் மேலெழும்பும் பொருளாதார நெருக்கீடு சகல வழிகளிலும் இம்மக்களை பாதிப்படையச் செய்துள்ளது. கல்வி மையச் சமூகமாக உருவெடுக்க வேண்டிய இம்மக்களின் கல்வியுரிமை பறிபோவதற்கும் பொருளாதார நெருக்கீடு அடிப்படையாக அமைந்து விளங்குவதாகவும் விசனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் தெரிந்ததேயாகும். இந்நிலையில் இவர்களின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தற்போது 1350 ரூபாவாக காணப்படும் பெருந்தோட்ட மக்களின் நாட்சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க வரவு செலவு திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுத்து இதனை சாதகமாக்கிக் கொள்ள மலையக அரசியல்வாதிகள் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து இன்னும் பழைய பல்லவியை பாடிக்கொண்டு சுய மற்றும் அரசியல் இலாபம் தேட முற்படுதலாகாது. கடந்த தேர்தலில் கற்றறிந்த பாடங்களை மலையக அரசியல்வாதிகள் கருத்தில் கொண்டு இனியேனும் சிந்தித்து செயற்பட வேண்டும். இல்லையேல் இன்னும் நிலைமை மோசமாகி விடும் என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அத்தோடு வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் முன்வைத்துள்ள விடயங்களை உரியவாறு சாத்தியப்படுத்த முனைதல் வேண்டும். அதைவிடுத்து எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான காய்நகர்த்தல்களாகவோ அல்லது கடந்த கால வரவு செலவு திட்ட முன்மொழிவுகளைப் போன்று ஏட்டுச்சுரைக்காயாகவோ இது இருந்துவிடக் கூடாது என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

**பெண்களின்... தொடர்ச்சி ...**

திருவள்ளுவரும் பெண் அடிமைத்தனத்தைக் குறிப்பிட்டுள்ளார் என அங்கவியலில் 91 வது அதிகாரமான பெண்வழிச்சேறலின் 3வது குறளான "இல்லாள்கண் தாழ்ந்து இயல்பின்மை எஞ்ஞான்றும் நல்லாருள் நாணுத்தரும்.

பெண்கள் இல்லறத்தை நன்றாக நடத்துவதற்குத்தான் உரியவர்கள் பொது வாழ்க்கையில் பங்குகொள்ள உரியவர்கள் அல்லர் என்று தான் கருதப்படுகிறது எனக் கூறபவர்களும் உண்டு. இங்கு இது காமவேட்கை காரணமாக பெண் வழிச்சேறலுக்கு முகக்யத்துவம் அளித்தால் அதன் வழி நாட்டின் பகையினை எதிர்கொள்ளும் ஆண்மைத்தன்மை பாதிக்கப்படும் என பகைமை வெல்வதற்கு ஆண்கள் எப்படித் தங்கள் வாழ்க்கைத்துணையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதை விளக்குவதாகவே இவ்வியல் திருவள்ளுவரால் அமைக்கப்பட்டுள்ளது என் பதை இவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை. அதாவது பெண் தன் தலைவனை நாட்டுப் பணிக்கு அனுப்ப வேண்டிய நேரத்தில் அதனைச் செய்யாதிருக்கிறேன் என்ற அச்சத்துக்கு ஆளாகாவிட்டால் அந்த அச்சமின்மை தலைவனின் நாட்டுக்கடமைக்குத் தடையாக அமையும். இதனாலேயே அத்தகைய தன்மையான பழிக்கு அஞ்சாத பெண்ணைக் கொண்ட தலைவன் நல்லார் முன் தன்நிலைக்கு நாணமடைய வேண்டி வரும் என்பதே திருக்குறளின் பெண்வழிச்சேறலின் அதிகாரத்தின் நோக்காக அமைகிறது.

இவ்வாறாகத் தமிழர் பண்பாட்டின் வரலாற்று வளர்ச்சியைத் தெரியாதவர்கள் மேற்குலக வடமொழி ஆய்வுகளின் முடிவுகளின் வழி தமிழரின் பண்பாட்டின் ஊற்றாக உள்ள தமிழ் இலக்கியங்களை பெண்விடுதலை குறித்த நாட்டம் இல்லாத ஒன்று எனப் பரப்புரை செய்வது தமிழ்ப்பெண்களின் பெருமைகளைக் கொண்டதாக செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் இலங்குகின்றன என்ற உண்மையையும் மறைத்து இளையவர்கள் தங்கள் மொழி தங்கள் பண்பாடு மனிதாயத்துக்கு எதிரானது என்ற உள்ளுணர்வுக்கு வரவும் இவை வழிவகுக்கின்றன.

சமகாலத்தில் பெண்கள் மீதான அனைத்து வகையான பாலியல் வன்முறைகளும் முள்ளி வாய்க்கால் இனப்படுகொலையில் கட்டவிழ்த்து விடப்பட்டது.. இச்செயல் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய மனிதஉரிமை மீறலாகும்.. இன்று வரை அதற்கு தீர்வு அற்ற முறையாக எத்தனையோ பெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டு மதி கலங்கி எம் கண்முன்னே நடைப்பிணமாகத் திரிகிறார்கள். இவ்வாறான நிலைமைகள் இனிவரும் காலங்களிலாவது ஒழிக்கப்பட்டு பெண்கள் தன்மானத்துடன் சமத்துவமாக சுதந்திரமாக வாழும் நாள் வெகு விரைவில் மலர வேண்டுமென நம்பிக்கையுடன் ஈழத்தமிழ்ப் பெண்கனே ஒன்று பட்டுத் தாயகத்திலும் அனைத்து உலகிலும் உழைப்பதை இலக்காகக் கொண்டு இவ்வாண்டில் ஈழத்தமிழ்ப் பெண்களுக்கு அறிவூட்டல் சத்தியளித்தல் செயற்திட்டங்களை உருவாக்க முயல உறுதி எடுப்போம்.

• • •




**இலங்கை - ஜப் ... தொடர்ச்சி ...**

குழுவில் அங்கம்வகிக்கும் நாடுகளுக்கும் இடையில் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இலங்கைக்கும், அந்த உறுப்புநாடுகளுக்கும் இடையில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அவை பரஸ்பரம் கைமாற்றம் செய்யப்படுவதே கடன் மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு இணக்கப்பாட்டின் நிறைவு செயன்முறையாகும்' எனவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கும் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு என்பன ஒட்டுமொத்த இந்து - பசுபிக் பிராந்தியத்தினதும் ஸ்திரத்தன்மைக்கும், சுபீட்சத்துக்கும் இன்றியமையாதவையாகும் எனவும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

## நேட்டோவின் … தொடர்ச்சி …

போல பாதுகாப்புச் செலவீனம் 800 பில்லியன் ஈரோக்களாக அதிகரிப்பது என்பது 100 விகித அதிகரிப்பாகும். எதிர்வரும் 5 வருடங்களில் தனது பாதுகாப்புச் செலவீனத்தை 2 தொடக்கம் 5 விகிதமாக அதிகரிக்க பிரான்சும், தற்போதுள்ள 1.3 விகித பாதுகாப்புச் செலவீனத்தை 2 விகிதமாக அதிகரிக்க பெல்ஜியமும் திட்டமிட்டுள்ளன.

2 விகித பாதுகாப்புச் செலவீனம் என்பது நேட்டோவின் அதி குறைந்த நிபந்தனையாகும். அதாவது தற்போது தான் பல ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் தாம் இருக்கின்றோம் என்பதை உணர ஆரம்பித்துள்ளன. அதாவது ரம்ப்பின் அழுத்தம் காரணமாக. ஆனால் இது அவர்களின் சக்திக்கு மீறிய அதிகரிப்பாகும்..

அதேசமயம் அதற்கான நிதியை ஐரோப்பா எங்கிருந்து பெறப்போகின்றது என்ற கேள்விகள் எழுந்துள்ளன. தமது நாட்டு மக்களின் சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்திற்கு செலவிடப்படும் நிதியை அவர்கள் குறைக்கப்போகிறார்களாக என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அமெரிக்காவின் செயல் குறித்து கருத்து தெரிவித்த செக் குடியரசின் பிரதமர் நாம் எமது பொருளாதார மற்றும் படைத்துறையை பலப்படுத்த வேண்டும். ஐரோப்பாவின் தற்போதைய கொள்கைகளை உடனடியாக மாற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை(3) டிறம் தனது ருவிட்டர் தளத்தில் நாளை ஒரு மிகப்பெபாரும் சம்பவம் நடவடிக்கப்போகின்றது என தெரிவித்திருந்தார். தற்போது தான் தெரிகின்றது அது உக்ரைனின் முடிவு என்று. டிறம்பின் இந்த நடவடிக்கையால் ஐரோப்பிய ஒன்றியம் பதற்றமடைந்துவருகையில் மறுவளமாக ரஸ்யாவுக்கு எதிரான சைபர் தாக்குதல் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்துமாறு அமெரிக்காவின் சைபர் பிரிவு கட்டளை மையத்திற்கு பாதுகாப்புச் செயலாளர் பீற் ஹெசத் உத்தர விட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் உக்ரைனுக்கான ஆயுத வினியோக தடையை ரஸ்யா வரவேற்பதாகவும் அது அமைதி முயற்சியை வலுப்படுத்தும் என ரஸ்யாவின் அரச தரப்பு பேச்சாளர் மிற்றி பெஸ்கொவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிடம் தற்போதுள்ள ஆயுதவளம் 6 மாதங்களுக்கே போதுமானது என அதன் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் பெடீர் வெனிலஸ்வ்கி தெரிவித்துள்ளார். தாம் ஆயுத உற்பத்தியை அதிகரிக்கப்போவதாகவும், ஐரோப்பிய ஒன்றியத் தின் ஆயுதங்கள் மூலம் தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலம் தெரிவித்துள்ளார். ஆனால் உக்ரைனுக்கு வழங்குவதற்கு போதுமான ஆயுத வளம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இல்லை என்பதுடன், உக்ரைனின் ஆயுத உற்பத்தி நிலையங்'கள் அனைத்தும் ரஸ்யாவின் ஏவுகணை மற்றும் வான் தாக்குதல் வலையத்திற்குள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது அவசரமாக தேவைப்படும் 1.5 மில்லியன் 155 மி.மீ ஆட்டிலறி குண்டுகளை கூட ஐரோப்பி ஒன்றியத்தால் வழங்க முடியுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. அதாவது ட்றம்ப்பின் இந்த நகர்வு என்பது உக்ரைனின் முடிவாகவே கருதப்படும். ஐரோப்பிய ஒன்றியம் எவ்வளவு தான் முயன்றாலும் அவர்களால் அமெரிக்காவின் உதவிகளை ஈடுசெய்வது என்பது தற்போது முடியாத காரியமாகவே பர்க்கப்படுகின்றது. மேலும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் ஏற்பட்டுள்ள மோதல்களும் அதற்கு சாதகமானதாக இல்லை. பிரான்சும், பிரித்தானியாவும் படையை அனுப்ப முடிவு செய்துவரும் போதும் இத்தாலிய பிரதமர் மெலனி அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார்.

நிதி உதவியில் கூட ஹங்கொரியும், ஸ்லோவாக்கியாவும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவாக இல்லை. மேலும் ஐரோப்பிய ஒன்றியம் அமைதிகான அணி, போருக்கான அணி என இரண்டு பிரிவாக பிளவடைந்துள்ளது.

அதேசமயம், நேட்டோ எந்த அறிக்கையும் இன்றி முடங்கிப்போயுள்ளது. தற்போதைய சம்பவங்கள் குறித்து அது மௌனமாகவே உள்ளது. அதாவது நேட்டோவின் நாட்கள் எண்ணப் படுகின்றன போலவே தெரிகின்றது.

• • •

## ரணில் விக்கிரம... தொடர்ச்சி ...

மேற்கொண்டிருப்பதாலும், அதன் நிதிவளம் அங்கு செறிவடைந்திருப்பதன் காரணத்தினாலும் மத்திய கிழக்கில் அமைதி நிலைப்பதையும், அந்த நாடுகளுடனான பரஸ்பர கூட்டுறவையும் ரஷ்யா பெரிதும் விரும்புகிறது.

**மேற்குலக அழுத்தத்தின் நடுவிலும், மத்திய கிழக்கு நாடுகள் ரஷ்யாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, அதனைப் பலப்படுத்தவும் முனைவதற்கான காரணம் என்ன?**

நவீன உலகும், பன்னாட்டு உறவு ஒழுங்கமைப்பும் மாற்றத்துக்கான ஒரு புதிய படிநிலையை அடைந்திருக்கின்றன. உலகம் முழுவதும் நடைபெற்று வரும் இந்த மாற்றங்களை மத்திய கிழக்கும் பிரதிபலிக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமது வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தமட்டில், மத்திய கிழக்கு நாடுகள், தமக்குச் சாதகமான முறையில், பல வித்தியாசமான இராஜீக அணுகுமுறைகளைக் கையாள்வதன் வழியாக, நடைமுறைவாத அணுகுமுறையையும், நடுநிலைமைத் தன்மையையும் கடைப்பிடித்து வருகின்றன.



இவ்வாறு மத்திய கிழக்கின் முக்கிய நாடுகளான, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், துருக்கி, எகிப்து போன்ற நாடுகள் சமகாலத்தில் மொஸ்கோவுடனும், மேற்குலக நாடுகளுடனும் நல்ல உறவையும் தொடர்பையும் பேணி வருகின்றன. மேற்குலக நாடுகள் பிரயோகிக்கும் அழுத்தம் காரணமாக இந்த நாடுகள் எவையும் ரஷ்யா மீது விதிக்கப்படும் பொருண்மியத் தடைகளுக்கு தமது ஆதரவை வழங்கப் போவதில்லை. உண்மையில் தற்போதைய சவாலான சூழ்நிலையில் மத்திய கிழக்கு நாடுகள் ரஷ்யாவுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் வகிப்பதையே பெரிதும் விரும்புகின்றன.

அடுத்த காரணம் என்னவென்றால், மத்திய கிழக்கில் உள்ள நாடுகளில் பெரும்பாலானவை மேற்குலகத்தை நம்புவதற்கு தற்போது தயாராக இல்லை. குடிபெயர்வோர் பிரச்சினை, ஏனைய ஆயுத வழிப் போராட்டங்கள் அல்லது ஆயுத விநியோகம் போன்ற விடயங்களில் மேற்குலக நாடுகள் இரட்டைத் தன்மை கொண்டிருப்பதன் காரணத்தினாலேயே, உக்ரேன் போர் தொடர்ந்து கொண்டிருப்பதாக இந்த நாடுகள் கருதுகின்றன. அமெரிக்கா மற்றும் மேற்குல நாடுகளின் அதிகாரம் மத்திய கிழக்குப் பிரதேசத்தில், கணிசமான அளவு குறைந்து கொண்டு வருகிறது.



ஒரு துருவ உலகத்துக்குப் பதிலாக ஓர் பல்துருவ உலகையே மத்திய கிழக்கு நாடுகள் விரும்புகின்றன. ஏனென்றால் அவ்வாறான ஒரு சூழலிலே தான் அதிக வாய்ப்புகளும் அதே நேரம் சமநிலையைப் பேணுவதன் மூலம் அதிக நன்மையையும் பெற்றுவருகின்றன. உதாரணமாக, அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களையும் பாதுகாப்பு உத்தரவாதத்தையும் பெறுதல், சீனாவிடமிருந்து முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல், சக்தி மற்றும் பாதுகாப்பு விடயத்தில் ரஷ்யாவுடன் கூட்டுறவை மேற்கொள்ளல். இவ்வாறாக, சமகாலத்தில் பல்வேறு தரப்பினருடனும் உறவினைப் பேணும் கொள்கையையே மத்திய கிழக்கு நாடுகள் இப்போது தமது அடிப்படைக் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றன. இவ்வாறாக இந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள அரசுகள், தமது சொந்த நலன்களை முன்வைத்து தமது இருப்பையும் அபிவிருத்தியையும் ஒரே நேரத்தில் தக்கவைத்து வருகின்றன.

**நன்றி: wgi.world**

K&K Stationers & Printers Ltd
Suppliers of Stationery, Art, Craft and Computer Printer Accessories



92-94 Mitcham Road London SW17 9NG
Tel: 020 8767 5149, 020 8767 2398 Fax: 020 8767 3210
e-mail: pirapu@kandkstationers.com
http://www.kandkstationers.com

## வேகமாக ... தொடர்ச்சி ...

வகைப்படுத்தப்பட்டுள்ளது.

25 வயதுக்கு மேற்பட்ட 2.11 பில்லியன் மக்களும், 5 தொடக்கம் 24 வயது வரையுள்ள 493 மில்லியன் மக்களும் தற்போது அதிக உடல் எடை கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் 1990 களில் 25 வயதுக்கு மேற்பட்ட 731 மில்லியன் மக்களும், 5 தொடக்கம் 24 வயது வரையுள்ள 198 மில்லியன் மக்களும் அதிக உடல் எடை கொண்டவர்களாக இருந்தனர். தற்போது அதன் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. இது மிகப்பெரும் சுகாதார செலவீனங்களையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்தும்.

25 வயதுக்கு மேற்பட்ட 3.8 பில்லியன் மக்களும், 5 தொடக்கம் 24 வயது வரையுள்ள 4746 மில்லியன் மக்களும் 2050 ஆம் ஆண்டு அதிக உடல் எடை கொண்டவர்களாக இருப்பார்கள் என அந்த ஆய்வில் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

உலகில் உள்ள 8 நாடுகளில் தான் அதிக உடை எடை கொண்டவர்களில் அரைவாசிப் மக்கள் வாழ்க்கின்றனர். சீனாவில் 402 மில்லியன், இந்தியாவில் 180 மில்லியன், அமெரிக்காவில் 172 மில்லியன், பிறேசிலில் 88 மில்லியன், ரஸ்யாவில் 71 மில்லியன், மெக்சிக்கோவில் 58 மில்லியன், இந்தோனேசியாவில் 52 மில்லியன், எகிப்தில் 41 மில்லியன் மக்கள் அதிக உடல் எடை கொண்டவர்களாக உள்ளனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச ... தொடர்ச்சி ...

மீது குண்டு வீசுவதாகும்.

ராஜபக்சாக்கள் செய்ததை இஸ்ரேல் செய்யவேண்டும், என அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டதுடன் இஸ்ரேல் எந்த வகையான சர்வதேச விசாரணை பொறுப்புக் கூறலிற்கும் உடன்படக்கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

சர்வதேச விசாரணை பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள் தவறியதால் இன்று சர்வதேச சட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது ,அவ்வாறு சர்வதேச சட்டங்களை புறக்கணிப்பதை நியாயப்படுத்தும் அதன் விளைவுகளை நியாயப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது, அதனை காசாவில் பார்க்க வேண்டியுள்ளது என்பது குறித்து நீங்கள் கவலையடைகின்றீர்களா? என கேட்டார்

இதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க நான் அந்த கட்டுரையை படிக்கவில்லை. ஆகவே அதில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. இதனால் அது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது என்றார்.

## சீனாவுடன்... தொடர்ச்சி ...

வருகின்றன. அவர்களின் கொள்கைகள் வேறுபட்டவை. அவர்கள் தமது பாதுகாப்புத் துறையை விரிவுபடுத்தி வருவதுடன் புதிய தொழில் நுட்பத்திற்கும் மாறி வருகின்றனர். அந்த நாடுகள் தமது பாதுகாப்பு செலவீனத்தை கடுமையாக உயர்த்தி வருகின்றன. அமெரிக்காவை வீழ்த்துவது தான் அவர்களின் திட்டம். நாம் சீனாவையோ அல்லது வேறு நாடுகளையோ போரில் வெல்ல வேண்டுமென்றால் அதற்கு நாம் முதலில் பலமானவர்களாக இருக்க வேண்டும். நீண்ட அமைதியை விரும்புபவர்கள் போருக்கு தயாராக இருக்க வேண்டும் என பொக்ஸ் ஊடகத்திற்கு வழங்கிய நேர்கணலில் ஹெசத் தெரிவித்துள்ளார்.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 370 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப் 2018 ஆம் ஆண்டு 25 விகித வரியை கொண்டுவந்திருந்தார். ஆனால் தற்போது மேலும் 20 விகித வரியை கொண்டுவந்துள்ளார். சீனாவும் அதற்கு பதிலடியாக அமெரிக்காவின் விவசாயப் உற்பத்திப் பொருட்களுக்கு 10 தொடக்கம் 15 விகித வரியை கொண்டுவந்துள்ளதுடன், 25 இற்கு மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது. இது தொடர்பில் உலக வர்த்தக நிறுவனத்தில் அமெரிக்காவுக்கு எதிராக சீனா வழக்கு ஒன்றையும் தொடுத்துள்ளது.

இதற்கு பதிலளித்த மெஹ்டி ஹசன் இஸ்ரேலை ஆதரிக்கும் சிலர் யுத்தகுற்றங்கள் மருத்துவமனைகள் மீதுதாக்குதலை மேற்கொள்வது போன்ற ராஜபக்ச பாணியை பின்பற்ற வேண்டும் என கருதுகின்றார்களே என கேள்வி எழுப்பினார்.

முள்ளிவாய்க்கால் மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே முக்கியமானது, வேறு சில சம்பவங்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன மருத்துவமனைகள் மீது விமானப்படைதாக்குதலை மேற்கொண்டுள்ளது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் பாரியளவில் பெருமளவில் இது இடம்பெற்றது என நான் தெரிவிக்கமாட்டேன்

மருத்துவமனைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளகூடாது என வலியுறுத்தியவன் நான் அதனை நாங்கள் உறுதி செய்தோம்.

யுத்தத்தின் இறுதி தருணங்களில் என்ன நடந்தது என்றால் ஆம் அங்கு பிரச்சினைகள் உள்ளது அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன், நான் இல்லை என தெரிவிக்க மாட்டேன் என்றார் ரணில்.

## தமிழர்களை ... தொடர்ச்சி ...

மூலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் அனைத்துலக விதிகளுக்கு அமைவாக பொறுப்புக்கு கூறல் மற்றும் இன நல்லிணக்கப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதை ஊக்குவிப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதாவது கடந்த ஆண்டு வெளிவந்த அறிக்கைக் கும் அல்லது காலம் காலமாக கடந்த 14 வருடங்களில் வெளிவந்த அறிக்கைகளுக்கும் தற்போதைய இரண்டு அறிக்கைகளுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை என்பதுடன், எந்தவித முன்னகர்வும் இன்றி இருப்பதுடன், அது தொடர்பில் அனுத்துலக சமூகமோ இல்லை ஐக்கிய நாடுகள் சபையோ அக்கறை காண்பிக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

மேலும் தமிழ் மக்களின் விவகாரம் உலகில் எங்கும் எந்தவொரு கவனத்தையும் ஈர்க்கவில்லை என்பது மட்டுமல்லாது, மெல்ல மெல்ல நாம் ஒரு தேசத்துக்குரிய மக்கள் என்பதை இந்த அனைத்துலக சமூகமும் மறந்துவருவதைத் தான் இது காட்டுகின்றது. எமது இந்த தோல்விக்கு தமது சொந்த பெருமைகளுக்காகவும், பெயருக்காகவும், விழா எடுப்பதற்காகவும் இயங்கும் புலம்பெயர் அமைப்புக்களும், செயற்திறனற்ற தாயகத்து தமிழ் அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் தார்மீகபொறுப்பை ஏற்க வேண்டும் என்பது தான் யதார்த்தம்.


## சீன இனவிவகார... தொடர்ச்சி ...

ஏற்படுத்த முனைந்தால், இந்தியா அதனை விரும்பாத ஒரு நிலைமை இருக்கின்றது என்கின்ற தோற்றப்பாடு மிக ஆழமாக தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருக்கிற கட்சித் தலைவர்களுக்கும் இருக்கிறது. இதனால் சீனா ஒரு தீண்டத்தகாத நாடாகப் பார்க்கப்படுது. இலங்கையில் இருக்கிற இந்திய அதிகாரிகள் அல்லது இந்திய தூதகரத்தினுடைய பிரதிபலிப்புகளும் காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இந்தியாவை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், அருணாச்சல் பிரதேசத்தில் அவர்கள் எல்லை மீறுகிறார்கள்.அதேபோல திபெத் எல்லையில் அவர்கள் பிரச்சனை பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவினுடைய சந்தை சீனாவுக்கு தேவையாக இருக்கிறது.

மேலும் தேசியவாதத்தை மையப்படுத்தி அந்த முரண்பாடுகள் இரு நாடுகளுக்கும் இருக்குமே தவிர, எப்போதுமே இந்திய பிரதமரோ சீன பிரதமரோ ஒருவரை ஒருவர் நிராகரித்துபேசியது அல்லது விமர்சித்து பேசியது கிடையாது. அதே நேரம் பிரிட்ஜ் என்கின்ற அமைப்பிலேயும் பார்த்தீர்கள் என்றால் அவர்கள் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் தந்திரசாலிகள். இந்தியாவினுடைய நோக்கம் ‘வல்லரசாக வேண்டும்’. உலகம் தன்னுடைய தலைமையில் இருக்க வேண்டும் என்பது சீனாவினுடைய நோக்கம். ஆகவே இந்த இலக்கு நோக்கி இரண்டு பேரும் நகர்வதால் இவர்கள் ஏதோ ஒரு புள்ளியில் வந்து சந்தித்துக் கொண்டிருப்பார்கள். இந்த ராஜதந்திரத்தை நாங்கள் கையாளுவதன் ஊடாக தாய்களை நகர்த்துவது தான் பொருத்தமாக இருக்கும் என்று என்னுடைய நிலைப்பாடு. அதே நேரத்தில் இலங்கை தமிழர் விவகாரத்தை சீனா பெரிதாக கையாளுவதற்கு தயாரில்லை.

அவர்களைப் பொறுத்தமட்டில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற விடயங்களில் வடக்கில் கால் ஊன்றுவதற்கு அல்லது கிழக்கில் கால் ஊன்றுவதற்கு முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

• • •



**ரணில் விக்கிரம... தொடர்ச்சி ...**

விடுபட விரும்பினால், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றியிருப்பார், தமிழ் ஆர்வலர்கள் மீதான துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பார், போர்க்குற்றங்களுக்கு நீதியை வழங்கியிருப்பார். ஆனால், அவர் அதற்கு நேர்மாறாகச் செய்துவந்துள்ளார்.

- ***தொல்பொருள் மற்றும் புத்தமதமயமாக்கல் என்ற போர்வையில் தமிழ் நிலங்கள் இன்னும் திருடப்படுகின்றன.***
- ***தமிழ் தாய்மார்கள் காணாமல் போன தங்கள் குழந்தைகளுக்காக 2,000 நாட்களுக்கும் மேலாகப் போராடி வருகின்றனர், ஆனால் விக்கிரமசிங்கே அவர்களைப் புறக்கணிக்கிறார்.***
- ***இராணுவம் இன்னும் தமிழ்ப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துகிறது, நான்கு தமிழ் பொதுமக்களுக்கும் ஒரு சிப்பாய் தமிழர் தாயகத்தில் உள்ளார்.***
- ***தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர், அதே நேரத்தில் சிங்கள போர் குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றித் திரிகிறார்கள்.***

விக்ரமசிங்கேவின் இலங்கை வன்முறையற்றது அல்ல - அது ஒரு வன்முறைமிக்க, இராணுவமயமாக்கப்பட்ட நாடு, அது தொடர்ந்து தமிழ் அடையாளத்தை அழிக்கிறது. அதை மாற்ற அவரது தலைமை எதுவும் செய்யவில்லை.

### இலங்கையின் இராணுவ ஜெனரல்கள்: அரசு மற்றும் சர்வதேச சமூகத்தால் பாதுகாக்கப்பட்ட போர்க்குற்றவாளிகள்.

2009 ஆம் ஆண்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு நேரடியாகப் பொறுப்பான ஜெனரல் ஷவேந்திர சில்வா, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பது மெஹ்தி ஹசனின் ரணில் விக்கிரமசிங்கேவுடனான நேர்காணலில் மிகவும் வருந்ததக்க விடையம். அது இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு அவமானம் மட்டுமல்ல - அது சர்வதேச பொறுப்புக்கூறலின் முழுமையான தோல்வியாகும். ஜெனரல் ஷவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் 58வது பிரிவில் ஒரு முக்கிய தளபதியாக இருந்தார், அந்த படை யணி தமிழ் இனப்படுகொலையின் இறுதி கட்டங்களில் மிகவும் கொடூரமான தாக்குதல்களில் சிலவற்றை வழிநடத்தியது. அவரது படைகள் மருத்துவமனைகள் மீது குண்டுவீசித் தாக்கின, பொதுமக்களை குறிவைத்தன, சரணடைந்த தமிழர்களை படுகொலை செய்தது, மேலும் பாலியல் வன்முறையை போரின் ஆயுதமாகப் பயன்படுத்தின. போர்க்குற்றங்களுக்கான விசாரணையை எதிர்கொள்வதற்குப் பதிலாக, அவருக்கு இலங்கையின் இராணுவத் தளபதியாக பணியாற்றுவது உட்பட உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் ஐ.நா போன்ற உலகளாவிய தளங்களில் நாட்டைப் பிரதிநிதித் துவப்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஜெனரல் சில்வா மட்டும் இதில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட வழக்குக்கு உரியவர் அல்ல. 2009 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்தின் முழு உயர் கட்டளை மையங்களும் போர்க்குற்றவாளிகளால் ஆனது, அவர்கள் பொறுப்புக்கூறப்பட வேண்டும். முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜெயசூர்யா, பொதுமக்கள் மீதான படுகொலைகளை மேற்பார்வையிட்டார். இனப்படுகொலையின் மற்றொரு கட்டமைப்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத்தின் நடவடிக்கைகளைப் பற்றி பெருமையாகப் பேசினார், மேலும் தமிழ் பொதுமக்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்படுவதை நியாயப்படுத்தினார். மற்றொரு மூத்த தளபதியான கமல் குணரத்னவும், நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட பாரிய அட்டூழியங்களில் ஈடுபட்டார். அவர்கள் தனியாகச் செயல்படவில்லை - அவர்கள் தமிழர்களை அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இருந்தனர், மேலும் அவர்கள் இன்றும் இலங்கை அரசால் பாதுகாக்கப்படுகிறார்கள்.

### இலங்கை இராணுவத்தின் தந்திரோபாயங்கள் என்பது இனப்படுகொலைக்கான ஒரு வரைபடம்

2009 இல் இடம்பெற்ற இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளில் வெறும் போர்க்குற்றங்கள் மட்டும் மேற்கொள்ளப்படவில்லை; நவீன யுகத்தில் இனப்படுகொலையை எவ்வாறு செய்வது என்பதற்கு அவை ஒரு எடுத்துக்காட்டு. மோதலின் ஒவ்வொரு கட்டமும் தமிழ் மக்களை அழிக்க திட்டமிட்ட முயற்சியாகும்:

- ***பாதுகாப்பு வலையங்கள் கொலைக்களங்களாக மாறியது: அரசாங்கம் பொதுமக்களை "பாதுகாப்பு வலையங்களில்" ஒன்றுகூடுமாறு அறிவுறுத்தியது, அவர்கள் அங்கு சிக்கிக்கொண்டவுடன் கண்மூடித்தனமாக ஷெல் மற்றும் குண்டுவீச்சுக்களை அந்த வலையங்கள் மீது நடத்தியது. ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பீரங்கி மற்றும் வான்வழித் தாக்குதல்களால் கொல்லப்பட்டனர்.***
- ***மருத்துவமனை மீதான குண்டு குண்டுத் தாக்குதல்கள்:***
- ***குறைந்தது 65 மருத்துவமனைகள் இலங்கை இராணுவத்தால் குறிவைக்கப்பட்டன, இது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் தெளிவான மீறலாகும். மருத்துவ உதவியை நாடிய நோயாளிகள், மருத்துவர்கள் மற்றும் குழந்தைகள் வேண்டுமென்றே கொல்லப்பட்டனர்.***
- ***நீதிக்குப் புறம்பான படுகொலைகள்:***
- ***இலங்கை படைவீரர்கள் சரணடைந்த போராளிகள் மற்றும் வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்தவர்கள் உட்பட பொதுமக்களை படுகொலை செய்தனர்.***

### பிரபலமான "வெள்ளைக் கொடி சம்பவம்"

ஐ.நா.வின் மத்தியஸ்தத்தின் கீழ் சரணடைந்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தமிழ் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

### போர் ஆயுதமாக பாலியல் வன்முறை:

உயிருடன் பிடிக்கப்பட்ட தமிழ் பெண்கள், கொல்லப்படுவதற்குமுன்பு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு சிதைக்கப்பட்டனர். புகைப்பட ஆதாரங்களும் நேரில் கண்ட சாட்சியங்களும் அதற்கு சான்றாகும்.

தமிழ் பெண்களை இழிவுபடுத்தவும் அவர்களின் அடையாளத்தை அழிக்கவும் இராணுவம் வேண்டுமென்றே பாலியல் பலாத்காரத்தைப் பயன்படுத்தியதை அவை உறுதிப்படுத்துகின்றன.

- கட்டாயக் காணாமல் போதல்கள்: குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டனர், அவர்கள் மீண்டும் திரும்பவில்லை. தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்று அறியக் கோரி 2,000 நாட்களுக்கும் மேலாகப் போராடி வரும் காணாமல் போனவர்களின் தாய்மார்களுக்கு பதிலளிக்க இலங்கை அரசாங்கம் மறுத்துவிட்டது.

இந்தக் குற்றங்களின் அளவு மற்றும் வேண்டுமென்றே செய்யப்பட்ட தன்மை தெளிவுபடுத்துகிறது: இது ஒரு போர் அல்ல - இது இனப்படுகொலை. நேரடி சர்வதேச தலையீட்டைத் தவிர்த்து, ஒரு மக்களை எவ்வாறு அழிப்பது என்பதற்கான எடுத்துக்காட்டாக இலங்கை இராணுவத்தின் தந்திரோபாயங்கள் உலகளவில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதனால்தான் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பிற இராணுவத் தலைவர்களுக்கு தண்டனை விலக்கு அளிப்பது மிகவும் ஆபத்தானது - இது மற்ற இனப்படுகொலை அரசுகள் இலங்கையின் நாடவடிக்கையை பின்பற்ற அனுமதிக்கிறது.

ஜெனரல் சவேந்திர சில்வாவை ஆஸ்திரேலியா அரசு தடை செய்யப்பட வேண்டும் - போர்க் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்

அமெரிக்கா உட்பட சில நாடுகள் ஜெனரல் சவேந்திர சில்வா மீது பயணத் தடை விதித்துள்ள நிலையில், ஆஸ்திரேலியா எந்த உறுதியான நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டது. சில்வா மற்றும் பிற இலங்கை போர்க் குற்றவாளிகள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவதைத் தடுக்க வேண்டும், மேலும் அவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினர் வெளிநாடுகளில் வைத்திருக்கும் எல்லா சொத்துக்களையும் முடக்க வேண்டும்.

மிக முக்கியமாக, இலங்கை இராணுவத்தை ஒரு சட்டபூர்வமான இராணுவமாக நடத்துவதை ஆஸ்திரேலியா நிறுத்த வேண்டும். "எல்லைப் பாதுகாப்பு" ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படுபவற்றின் கீழ் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சி அளித்து ஒத்துழைப்பதற்குப் பதிலாக, 2009 இல் செய்யப்பட்ட போர்க்குற்றங்களுக்கு ஆஸ்திரேலியா முழு பொறுப்புக்கூறலைக் கோர வேண்டும். காணாமல் போனவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதற்கு இலங்கை இராணுவம் பதிலளிக்க வேண்டும். இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது தடைகளை விதிக்கவும், அவர்களின் குற்றங்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கவும் ஆஸ்திரேலியா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

### ஆஸ்திரேலியாவின் கடமை மற்றும் பொறுப்பு

ஈழத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை ஆஸ்திரேலியா வரலாற்று ரீதியாக புறக்கணித்து வருகிறது, மேலும் இலங்கையை ஒரு இனப்படுகொலை நாடாக அல்லாமல் ஒரு கூட்டாளியாகக் கருதி வருகிறது. அடுத்தடுத்து வந்த ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் தமிழ் அகதிகளை நாடு கடத்தியுள்ளன, இலங்கை கடற்படையுடன் ஒத்துழைத்து, இனப்படுகொலையில் இருந்து தஞ்சம் கோருபவர்களைத் தடுக்கின்றன, மேலும் ஐக்கிய நாடுகள் சபையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்த மறுத்துவிட்டன. ஆஸ்திரேலியா உண்மையிலேயே மனித உரிமைகளை மதித்தால், இலங்கையை பொறுப்புக்கூற வைப்பதில் அது ஒரு தீவிரமான பங்கை ஆற்ற வேண்டும்:

- ***ஷவேந்திர சில்வா போன்ற போர்க்குற்றவாளிகள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவதைத் தடை செய்யுங்கள்.***
- ***இலங்கையுடனான அனைத்து இராணுவ மற்றும் பாதுகாப்பு உறவுகளையும் துண்டிக்கவும்.***
- ***தமிழ் இனப்படுகொலைக்கு காரணமானவர்களைத் தண்டிக்க சர்வதேச போர்க்குற்ற தீர்ப்பாயத்தை ஆதரிக்கவும்.***
- ***காணாமல் போனவர்களின் தலைவிதியை வெளிப்படுத்தவும், மனிதப் புதைகுழிகள் குறித்து சுயாதீன விசாரணைகளை அனுமதிக்கவும் இலங்கை இராணுவத்திற்கு அழுத்தம் கொடுங்கள்.***

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

### மகளிர் தினம்... தொடர்ச்சி ...

காண முடிகிறது எனவே தான் ஒட்டுமொத்தமாக சுதந்திரத்துடன் கூடிய உரிமைகள் இல்லை என்றே சொல்ல முடியும்.

சர்வதேச ரீதியில் பத்துக்கும் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளிலேயே பெண்கள் அரச தலைவர்களாக உள்ளனர். பெண்கள் அரசியலில் முக்கியத்துவம் பெற்றாலும் உயர்மட்ட வர்த்தகம், கைத்தொழில் துறைகளில் தீர்மானம் மேற்கொள்ளல் போன்ற விடயங்களில் குறைந்தளவே பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இலங்கையில் பெண்களுக்கு சுதந்திரம் மற்றும் உரிமைகள் இருப்பது சட்டப்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் கல்வி, வேலை, அரசியலில் கலந்து கொள்வது, வாக்குரிமை, உடல் மற்றும் பிற மனித உரிமைகள் போன்ற பல அடிப்படை உரிமை களைக் காப்பாற்றும் சட்டங்கள் உள்ளன ஆனாலும் அது நடைமுறைச் சாத்தியத்தில் பாதுகாக்கப்படுவதில்லை

எனினும், சமூகத்தில் இன்னும் பல சமுதாயப் பிரச்சினைகள், பணவீக்கம், பாலின சமத்துவம் குறித்த சவால்கள், மற்றும் துயரமான குடும்ப மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக பெண்கள் சில பகுதிகளில் முழுமையான உரிமைகளை அனுபவிக்க முடியாது.

இதன் மூலம், சட்டப்படி பெண்கள் பல உரிமைகளைக் கொண்டிருந்தாலும், அவற்றை நடைமுறையில் நடைமுறைப்படுத்துவதில் சவால் கள் உள்ளன.

இலங்கையில் மகளிர் தினம் கொண்டாடப்படுகின்ற போதிலும் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுவது முக்கியமான மற்றும் எளிதில் கவனிக்கப்படாத சமுதாய மற்றும் கலாச்சார சவால்களைக் குறிக்கின்றது. இவை பல்வேறு காரணங்களால் ஏற்படுகின்றன:

இலங்கையில் பல பகுதிகளில், குறிப்பாக கிராமப்புறங்களில், பாரம்பரிய மற்றும் கலாச்சாரமான பொது கருத்துக்களுடன் கூடியதன் காரணமாக, பெண்களின் உரிமைகள் முழுமையாக கடைபிடிக்கப்படவில்லை. பெண்கள் சில சமயங்களில் குடும்பத்தில் அல்லது சமூகத்தில் கீழ்ப்படிவான நிலைகளில் இருக்கக்கூடியவர்கள் என்பதுடன் மென்மையானவர்கள் என்பதே. யதார்த்தம் அவர்களின் எண்ணங்களை அல்லது விருப்பங்களை வெளிப்படுத்துவது கடினமாக இருக்கலாம். இதனால் கருத்து சுதந்திரம் கூட இல்லாமல் போகலாம். எடுத்து காட்டாக கவனயீர்ப்பு போராட்டங்களில் தங்களது உரிமைகளை வலியுறுத்தி போராடுகின்ற போது பெண்களின் கைது ஒரு விடயமாக காணப்படுகிறது. இதனால் சுதந்திரமற்ற தன்மை அங்கு உருவாக்கப்படுகிறது

மேலும் பெண்கள் தொழிலாளர் உரிமைகள், கல்வி, அல்லது சமுதாயத்தில் முன்னேற்றம் அடைய அவசியமான வாய்ப்புகளை பறிமாறிவிடுகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறை, பாலின வித்தியாசங்கள், மற்றும் கல்வி அல்லது வேலையில் சமமான வாய்ப்புகள் வழங்கப்படாமை போன்ற சிக்கல்கள் அடிக்கடி இருக்கின்றன. இது பெண்கள் சமுதாயத்தில் தங்களை முழுமையாக அறியவோ அல்லது முன்னேற்றப்படவோ முடியாது எனும் நிலையை உருவாக்குகிறது.

அரசியல், சட்ட, மற்றும் சமூக மாற்றங்கள் கட்டாயமாக முன்னெடுக்கப்படவேண்டும் என்றாலும், அவற்றை நடைமுறைப்படுத்தும் போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பெண்களின் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் இருப்பினும், அவை அனைத்து சமூகத் தொகுதிகளிலும் சமமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான பல் வேறுபட்ட சமூக பிரச்சினைகளால் பெண்கள் இன்னும் சில சமுதாயங்களில் அவர்களுடைய முழு உரிமைகளை அனுபவிக்கவில்லை.

இதன் மூலம் ஒட்டு மொத்தமாக மகளிர் தினம் கொண்டாடுவது மட்டுமே முழுமையான உரிமைகளுக்கான தீர்வு அல்ல தீர்வை அரசாங்கம் பெண்களுக்காக இந்த விசேட நாளில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதன் மூலமும் கடுமையான சட்டங்கள் ஊடாக தீர்வை வலியுறுத்துவதனாலும் உரிமை சுதந்திரம் பாதுகாக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

• • •

### ரணில் விக்கிரம... தொடர்ச்சி ...

இலங்கை போர்க்குற்றவாளிகளை பாதுகாப்பதை ஆஸ்திரேலியா நிறுத்தி, தமிழ் மக்களின் நீதிக்காக ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இனப்படுகொலை 2009 உடன் முடிவடையவில்லை - அது நடந்து கொண்டிருக்கிறது, மேலும் இலங்கையின் குற்றங்களை உலகம் ஏற்றுக்கொண்டு அதற்கு எதிராக செயல்பட வேண்டிய நேரம் இது.

**ரணிலில் இருந்து அனுரா வரை: இலங்கையின் இனப்படுகொலை சுழற்சி தொடர்கிறது**

தற்போது, அனுரா குமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தபோதம், அதே இனப்படுகொலை சுழற்சியைத் தொடரும் மற்றொரு சிங்களத் தலைவரை தமிழர்கள் காண்கிறார்கள். ரணிலைப் போலவே, அனுராவும், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட 165,000 தமிழ் உயிர்களை இனப்படுகொலை என்று ஒப்புக்கொள்ள மறுத்து, அதற்கு பதிலாக ஒற்றையாட்சி இலங்கை அரசைப் பாதுகாக்க வலியுறுத்துகிறார் - இது சிங்கள-பௌத்த ஆதிக்கத்தைப் பேணுவதற்காக வடிவமைக்கப்பட்ட உள்ளார்ந்த இனவெறி அமைப்பு. ஊழல் மற்றும் அநீதியை எதிர்த்துப் போராடுவதாக அவர் கூறினாலும், தமிழ் ஈழத்தில் தொடர்ச்சியான இராணுவ ஆக்கிரமிப்பு, கட்டாயமாக காணாமல் போதல்கள் மற்றும் தமிழர்களை நிரந்தர ஒடுக்குமுறையின் கீழ் வைத்திருக்கும் கட்டமைப்பு வன்முறை ஆகியன குறித்து அவர் அமைதியாகவே இருந்து வருகிறார்.

அவரால் இராணுவத்தின் அதிகாரத்தை அகற்ற முயலவில்லை, மாறாக அதை வலுப்படுத்தி, தமிழ் நிலங்கள் சிங்கள கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதை உறுதி செய்கின்றார். தொல்பொருள் துறை, மீன்வளத் துறை மற்றும் வனத்துறை ஆகியவை தமிழ் வளங்களைத் திருடுவது, தமிழ் பாரம்பரியத்தை அழிப்பது மற்றும் தமிழர் வாழ்வாதாரங்களை சிதைப்பது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்கின்றன. அவருக்கு முன் இருந்த மற்றய இலங்கைத் தலைவர்களைப் போலவே, அனுராவும் இனப்படுகொலை அரசின் அடித்தளத்தை நிலைநிறுத்தும்போது வித்தியாசமாக நடிக்கிறார்.

இலங்கையில் எந்த மாற்றமும் இல்லை - ஈழத் தமிழர்கள் மீதான அதே கொடூரமான ஒடுக்குமுறையைப் பராமரிக்கும் புதிய முகங்கள் மட்டுமே வந்துள்ளன. ராஜபக்சேக்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிப்பதை ரணில் உறுதி செய்தார், இனப்படுகொலை தொடர்வதை அனுரா உறுதி செய்வார். தமிழர்கள் தங்கள் அழிவு தொடர்பில் இலங்கை அரசால் கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பிலிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது. இலங்கையின் இனப்படுகொலைக்கான சர்வதேச பொறுப்புக்கூறலும், தமிழ் ஈழத்தின் சுயநிர்ணய உரிமையை உணர்ந்து கொள்வதும் மட்டுமே முன்னோக்கி செல்லும் ஒரே பாதை.

**தமிழ் ஈழம் நீடூழி வாழ்க வாழ்த்துகிறேன்**




### வட,கிழக்கில் ... தொடர்ச்சி ...

காலிலும் நினைவு கூருவார்கள்.

கடந்தவருடம் உங்களுடைய ஆட்சியில் தடைஇல்லாமல் உணர்வுபூர்வமாக நவம்பர் 27 நாளினை நிம்மதியாக நினைவு கூர்ந்தார்கள்.

துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். இராணவத்தினர் எண்ணிக்கையும் வடக்கு, கிழக்கில் அதிகமாகவும், முல்லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் இரண்டு மக்களுக்கு ஒருபடையினர் என்று உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒரு சொட்டுக்கண்ணீர் சிந்தி, தமது மனத்தை ஆறுதல் படுத்துவதற்கு, இராணுவம் அத்துமீறி கையகப் படுத்திவைத்துள்ள முள்ளியவளை, அளம்பில், தேராவில், ஈச்சங்குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கி லுள்ள இன்னும் சில துயிலுமில்லங்களையும் விடுவியுங்கள். வடக்கு, கிழக்கு தமிழ்மக்களின் சார்பாக இந்தக் கோரிக்கையினை முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்




போராடுவோம் போராடுவோம்
தீர்வு வரை
போராடுவோம்.
வேண்டும் வேண்டும்
எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும்
எமது குடும்ப வறுமைக்கும்
தீர்வு வேண்டும்.
අපේ වැටුප්
අපිට දෙන්න



